உ

கடவுள் துணை.

# புலந்திரன் களவு

## நாடகம்.

இஃது.

வீரப்பஉபாத்தியாயரால் எழுதப்பட்டு.

கள்ளக்குரிச்சிதாலுக்கா ரிஷிவந்தியம

புஸ்தகவியாபாரம்.

ம-ா-ா-ஸ்ரீ, கன்னய்ய செட்டியாரால்

கொடுக்கப்பட்ட விந்தநாடகத்தை.

உளுந்தூர்பேட்டை புஸ்தகவியாபாரம்

ஆ. கந்தசாமிசெட்டியார் வேண்டுகோளின்படி

சூளை-கரையான்குட்டை,

முனிசாமி முதலியாரா

சகலசுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு,

ரிஜிஸ்டர்செய்து.

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

1909

MADRAS.

விலை] ரிஜிஸ்டர்காபிரைட். [அணா 5

அலகானம்பாப்பையர் வீதி-32-வது-வீடு சென்னைசூளை

THE REGISTRAR REGISTERED 2-NOV 1909 MADRAS

240

## ரிஜிஸ்டர்ட் காப்பிரைட்

# அறிவிப்பு.

இதனால் சகலமான கனதனவான்களுக்கும் அச்சாபீஸ்தலைவருக்கும் தெரிவிப்பது யாதெனில் இந்த புலந்திரன் களவுநாடகத்தை யானாகிய (சூளை முனிசாமி முதலியாரவர்களால்) சகல சுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு 1909 - வருத்திய 15 - வது ஆக்டு 20 வது செக்ஷன் 8 - வது ரூல்சின்பிரகாரம் (ரிஜிஸ்டர் காபிரைட்) செய்யப்பட்டிருக்கிறபடியால் என்னுடைய உத்திரவின்றி இன்னூலை எவர்களும் அச்சி[illegible]க்கூ[illegible]து

இப்படிக்கு,

சூளை முனிசாமிமுதலியார்.

உ

கடவுள் துணை.

# புலந்திரன் களவு நாடகம்.

## விநாயகர் துதி.

சீர்பெருமதுரை அல்லி செல்வனும்புலந்திராஜன்
கார்பெருமனைவியாளை கலந்தரிகனைப்புணர்ந்த
பேர்பெரும்சரித்திரந்தன்னை பெரியநாடகமாய்பாட
யேர்பெரும்கரிமுகத்தோன் யிணையடிகாப்புதானே.



## விநாயகர்வருகிற தரு.

சிங்காரமாக

செக்கழணி ஐங்கரர்வந்தார்
செங்சழணி ஐங்கரர்வந்தார்
கெங்கைபணியுபீசன் மங்கைசிவகாமியும
பொங்கமுடனளித்த போதநாதவிநோதன் (செக,
ஐந்துகரமும்நீரே ஆனைமுகம்நீரே
மந்திரமுப்புரிநாலும் மார்பிலணிந்தவர்நீரே (செக)
வேழமுகமும்நீரே வேதப்பொருளும்நீரே
ஏழைக்கிதங்கிவரும் யெங்கும்பிரகாசம்நீரே(செக)
அண்டமெல்லாம்துதிக்கும அன்பாவிநாயகமூர்த்தி
கொண்டாடவுலகெங்கும் கூத்தாடும்பிள்ளையாரே (செக)

பொன்னுலகத்தார்போற்றி பூமாரிசொரிந்திடவே
மன்னுமறையோர்கள் வேதம்பாடிபதம்படிக்க (செய்)

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக விநாயகமூர்த்தி கொலுவில்அலங்கரித்திரு க்கும்போது துரியோதனன் வாசல்காக்கும் கட்டியக்காரன் கொலு வுக்கு வருகிறவிதங்காண்க.

கட்டியக்காரன் சொல் கவி.

பார்த்திடும்சபையோர்மெச்ச பட்டநாமங்கள்சாத்தி
கோர்த்தியாய் துரியன்வாசல் நின்றுமேகாவல்காக்கும
பூர்த்தியாய்யிடையில்கச்சை முன்கையில்கத்திகேடயமும்கொண்டு
வேற்கவேசபையைத்தேடி விரைவுடன்மேவினானே.

வசனம்.

அஸ்த்தினபுரத்தை அரசாக்ஷிசெய்யும் துரியோதனமகாராஜன் அரண்மனை வாசல்காக்கும் கட்டியக்காரன் கொலுவாக வருகிறவிதங் காண்க.



கட்டியக்காரன்வருகிற தரு

கட்டியக்காரனிதோவந்தான் துரியன்வாசல்காக்கும்
கட்டியக்காரனும்வந்தான்
கட்டியக்காரனும்வந்தான் இட்டமாய்நாமமுமிட்டு
சட்டைஜல்லடம்பூண்டு கத்திகேடயங்கொண்டு (கட்)
காலில்சிலம்புசத்தம கலகலகலவென்ன
அலைக்கிசொல்லியேசபை அதட்டிகையமர்த்தியே (கட்)
பல்லும்பளபளென்ன பல்காவிசோதிமின்ன
சொல்லும்சொருகுமாய சுருக்காய்நடைநடந்து (கட்)

### பொதுவசனம்.

அகோதெப்படியென்றால் அஸ்திநாபுரத்தை அரசாக்ஷிசெய்யாநின்ற துரியோதனமகாராஜன் சபைக்கு வருகிறபடியால் அதற்குமுன்னதாக ஆசாரவாசல் காக்கும் கட்டியக்காரன்வந்து அலங்கிர்தம செய்ய அப்போது துரியோதனமகாராஜன் கொலுவாக வருகிரவிதனை காண்க,

### துரியோதிரன்சொல் கவி.

உன்னிதபணிகள்மின்ன உசிதமகுடம்பூண்டு
கவனிபர்கவுரிவீச கரிபரிரதங்கள்சூழ
தன்னிகரில்லாமந்திரி சகுனிசல்லியனும்கூட
மன்னியதுரியராஜன் மகிக்ஷியாய்வருகின்றானே



### துரியோதனன்வருகிர தரு.

தேசமெங்கும்வணங்கும் ராஜர்க்கதிபனான
துரியோதனராஜனவந்தான் பலபடைகளநெருங்கிட
துரியோதனராஜன்வந்தான்
வாசவனிவனென்ன வரிசைதம்பிமார்களுடன் (தரு)
மந்திரபூபதி தந்திரசகுனியும்
சுத்திலுமகாவலர் பத்திநெருங்கிட (தேச)
வச்சிரமணிமகுடம் உச்சிதபணிகள்மின்ன
மகரகுண்டலமாடவே வெகுவேடிக்கையாக
மகரகுண்டலமாடவே
கச்சணிமாதர்களாட கன்னியர்கவரிவீசபாட (தரு)

கந்தமிகுந்திடும் விந்தையலங்கிர்த
சுந்திரமாகவே சந்திரகுலபதி (தேச)
பொங்கமுடன்மாதர்கள் புகழ்ந்து ஆலாத்தியேந்த
பூச்சக்ரகுடைகவிக்கவே சிங்காரமாக
பூச்சக்ரகுடைகவிக்கவே
செங்கையில்சிலைவாள்தண்டம் தங்கியகடகமின்ன (சுரு)
சேனைத்தலைவரும் யானைப்பரிகரும்
சோலைக்கடலென நானிலமஞ்ச (தேச)
சல்லரிமுரசுடங்கா மல்லரிபூரிகைபெரிய
டமரகம்திங்கிடென்னவே அப்போ
சொல்லரியவெத்திமாலை கல்லணாந்தியாவட்டம (சுரு)
துன்னியபரிமளம உன்னிதம்பெருகிட
மன்னியஅஸ்த்தினு தன்னகராளும் (தேச)

ஜகுனிசொல் கவி.

குருகுலத்தலைவனுனை கொத்தலர் துரியபூபா
மருகனே அல்லிமைந்தன் மனைவியைசிறையில்வைத்து
ஒருவனைதக்கிடாலந்த உடனேவந்தெதிர்ப்பாரைவர்
துருவனுனைக்குவெத்தி செய்துமேவைப்பேன்பாராய்

வசனம்.

கேளும்மருமகனுனை துரியபூபனேமதுராபுரி அல்லிமைந்தன்புல ந்திரனுக்கு உமதுதங்கைபுத்திரியான கலந்தாரியைக்கொடுத்து விவாகம்செய்து வைத்திரல்லவா யிப்போ துஒருகோட்டையலங்கரித்து அதர்க்குள்ளே சிறைவைத்தால் அவர்கள்வந்து கேட்டால் அனுப்புகிறதில்லையென்று படுவழக்கிட்டால பாண்டவர்கள்நம்மையெதிர்த்து வருவார்கள் அந்தகாலத்தில அவர்களைப்பிடித்து நானே ஜெயம்பண்ணி தருகிறேன்மருமகனுனை துரியபூபனே.

துரியனுக்கும் ஜகுனிக்கும்தர்க்கம் தரு.

நல்லவசனமசொன்னீர்மாமா அந்த
நங்கையைசிறையில் வைக்கலாமா
சல்லாபசுந்தரி கலந்தாரிக்ஙாவனை
தழுவிசுகம்பெராமல் பழுதுவரலாமோயெண்ணி (நல்)

ஜகுனிசொல்தரு.

பகையாளிகளேபெண்ணை தந்தாய் யிப்போ
பகைஷம்பெருகிமனம் ஞெரந்தாய்

தருமோவிஜயன்மைந்தன் தங்கைமகளைசேர்ந்தால
தருமபஞ்சவர்மீது வருமோபகைநினைக்க (பகை)

துரியன்சொல் தரு.

மங்கைசிறையிருந்து வாடியிப்போது
வஞ்சகம்தீர்க்கவே வகைதேடு
தங்கையென்னைதிட்டி சாபித்துகோபிப்பாளே
தையலழுதுவாட வய்யகம்நகையாதோ (ம)

ஜகுனிசொல் தரு.

பலவிதயோசனையெண்ணி நீரும்
பார்ப்பதென்னமனக் குண்வனி
வலிவுள்ளஐவரை மடிக்காமலிருந்தாலே
வருமேயரசுக்கினம் அரியமொழிந்தேன்கேளும் (பல)

துரியன்சொல்கவி.

கலந்தாரிபுருஷகக மழிந்திட்டாலும்
கடிந்துரைத்துதங்கையென்னை வைதிட்டாலும
குலந்தானேபழுதுவர நேர்ந்திட்டாலும்
குவலயத்துமன்னரென்னை நகைத்திட்டாலும்
நலந்தானேகண்டுரைக்கும மாமாசொல்லை
நான்தடுத்துயிவ்வுலகை யாள்வதுண்டோ
பலந்தானேமிகுந்ததொரு கோட்டைகட்ட
பக்ஷமுடன்விடையளித்தேன் நடத்துவீரே.

வசனம்.

கேளுமமாமா கலந்தாரிநாயகம சுகமிழந்துபோனாலும் யென்த ங்கையான துர்ச்சடையென்னை திட்டியென்னுசையை வெருத்தபோ திலும் யிதினாலேகுலம்பழுது வந்தபோதிலும் உலகமெனக்குநகைத் தபோதிலும் நல்லயோசனை யரிந்துசொல்லப்பட்ட மாமா உனதுவார் த்தையை தடுத்து காளிக்க வுலகத்தை யாள்வதுண்டோ உமதுமன தின்படி கோட்டைகட்டி முடிக்க உத்திரவுகொடுத்தேன் மனதின்ப டிநடத்தும மாமாவே.

ஜகுனிசொல் வசனம்.

[illegible]ளும் மருமகனே கலந்தாரியிருக்கும்படி கோட்டைகட்டி மு[illegible] மருமகனான துரியபூபனே.

துரியன்சொல் கவி.

இங்குள்ளேயேவல்செய்யும் யேந்திழைமாரேகேளாய்
பொக்கமாயரண்மனைக்கு யிப்பவேநீங்களோடி
பைங்கிளிமொழிக்கிசைந்த பாவையர்க்கரசியான
தங்கைபுத்திரியையிங்கு சுறுதியில்வரச்செய்வீரே.

வசனம்.

கேளும்பணிப்பெண்களா நீங்களரண்மனைசென்று யென்தங்கை புத்திரியான கலந்தாரியை அழைத்துவாருமபெண்களா.

கலந்தாரிசொல் கவி.

வானகந்தன்னிலுள்ள வச்ரபூஷணங்கள்மின்ன
மேனகைதனக்கொப்பான மெல்லியரிசயிக்க
ஜானகிரதியாளென்ன சகலபூஷணங்கள்பூண்டு
கானகமயில்போல்சித்ர கலந்தாரிவருகின்றாளே.



கலந்தாரிவருகிற தரு.

கதிரொத்தமணிசித்ர வதனஅழகில்மிக்க
கலந்தாரிமாதுவந்தாள் துரியனைக்காண
கலந்தாரிமாதுவந்தாள்
வடிவோரதியாளென்ன வதனம்தளதளென்ன (தரு)
மன்னியபூஷணி உன்னிதப்பெருகிய
கன்னியர்சூழவே மின்னிடைரூபி (கதி)
கெத்தியில்கட்டிகள்மின்ன முத்துகள்பளபளென்ன
நேசமுடனேநடந்தாள் வெகுவேடிக்கையாக
நேசமுடனேநடந்தாள்
சித்திரப்பதுமைரூபி தத்திநடைநடந்து (தரு)

| | |
|---|---|
| சேலைகதிரொளி | சோலைகுயிலென |
| வாலைபருவகுண | சாலவசிகரி (கதி) |
| கொண்டைகுப்பிகளாட | வண்டுகீதங்கள்பாட |
| கோதைசிகாமணிவந்தாள் | யின்னமபணிகள்பூண்டு |
| கோதைசிகாமணிவந்தாள் | |
| தண்டைகொலுசுபீலி | சதங்கைகலகலென்ன (கரு) |
| தங்கியநவமணி | செக்கயிற்கடகமும் |
| பங்கையுமதிவித | சுங்குகளாட (சதி) |
| சந்தனகளபமலர் | கந்தமும்கமகமென்ன |
| தங்கவொட்டியாணமின்னவே | நல்லயிடையினில் |
| தங்கவொட்டியாணமின்னவே | |
| சிந்தையிலெந்தனையெண்ணி | வந்திடயழைத்தசேதி (கரு) |
| செப்பவுமரியவே | ஒப்பிலாரூபி |
| யிப்பவுமெச்சிய | அற்புதரஞ்சனி (கதி) |

வேறு தரு.

| | |
|---|---|
| மணிமகுடராஜர்கோவே | உந்தன்மலரடிக்கியான்சருணம் (கரு) |
| மன்னும்பூஷணு | யென்னையழைத்ததை |
| யின்னதென்றுமே | பண்ணுவீர்களே (மணி) |

தூரியன்சொல தரு-

| | |
|---|---|
| அணியுமணிபூஷணமே | அன்புஜமேயின்பமாதே (கரு) |
| அந்தஅல்லியாள் | மைந்தனுக்குமே |
| தந்துமேமனம் | ஞெந்தேன்யானுமே (அணி) |

கலந்தாரிசொல் தரு.

| | |
|---|---|
| மதுரைஅல்லிமைந்தனுக்கு | மகிழ்ந்தயென்னை தந்தமாமா (கரு) |
| வாட்டமாகவே | நாட்டமாதுயர் |
| பூட்டிவேயிட்டர் | காட்டலாகுமோ (மது) |

தூரியன்சொல் தரு.

| | |
|---|---|
| வதனமணிரஞ்சிதமே | மாலையிட்டயுன்கணவன் (கரு) |
| வாரதேயினி | சேரயுக்கனே |
| திரமாகுமோ | கூரவேயினி (வத) |

கலந்தாரிசொல் கவி.

வல்லமெகம்பீரமுள்ள மாமாமேமன துவாடி
சொல்லவுமயென்னையழைத்து சுகமொழியரிங்கேதனிப்போ
பொல்லாதகாலம்தானோ பூவையையழைத்தசேதி
உல்லாசதிராவொன்றும ஓளியாமல்உரைசெய்வாயே.

வசனம்.

கேளும்மாமாவே அடியாளை அழைப்பித்த காரியத்தையோசித்துப்பார்த்தால் அசந்தர்ப்பமாயிருப்பது யெனக்குவிபரமாய் தெரிவிக்கவேண்டுமமாமாவே,

துரியோதனன் சொல்கவி.

உத்தமியாள்செல்வியுன் தலைவிதியோ அய்யோ
சத்ராதிமைந்தனுக்கு தந்துநான்மனதுநொந்தேன்
வைத்திடசாலமுள்ள வரைக்கிந்தகோட்டைக்குள்ளே
சித்திரபதுமைபோல செல்வியேயிருந்திடாயே

வசனம்.

கேளும்பெண்ணே கலந்தாரியே யெனதுசத்ராதி மைந்தனுக்குத்தந்து மனதுநொந்தேன் யினிமேலவர்கள் யிடத்துக்குப்போகாமலிருக்கும்படியிந்தா விநோதமானகோட்டை யலங்கரித்துவைத்தேன் அதற்குளளேயிருந்து ஆண்காத்துபடாமல் காலங்கழிக்கும்படிபோய் வாரும்கண்மணியே.

கலந்தாரிசொல் தரு.

அய்யோயிது வென்னபாவம் யொன்றும்
அறியாமல்பேசுகீர் கோபம்
தையல்சிறையிருக்க தருமமோயுனக்கிது
தடுத்துச்சொல்லவுமிங்கு யெடுத்துசொல்லுவாருண்டோ (அ)

துரியன்சொல் தரு.

புருத்துப்பேசுவதென்னமோடி யிப்போ
வருதேகோபம்பாரடி போடி
கருத்தை தெரியாமல் கலங்கித்தவிக்கலாமோ
காட்டிக்கொடுவாளால் வாட்டுவேன்தடைசெய்தால் (ம)

கலந்தாரிசொல் தரு.

பாவைசிறையிருந்து வாட
பரிவில்லாமலேவதை தேட
நாவுதுணிந்துசொன்ன ராஜசேகரனே
கல்லுதல்லவுந்தன் செல்வத்துக்கிதுகுத்தம் (பா)

துரியன்சொல் தரு,

சத்துருபாண்டவாள் மீற அந்த
தனஞ்செயன் மகனுக்கே சேர
வைததுன்னையழைப்பிப்பே மனம்துணிந்திருப்பேனே
வாட்டமில்லாமலே கோட்டைக்குள்ளேக (சத்)

கலந்தாரிசொல் கந்தார்த்தம்.

இறைபவனருளினாலே யிவ்வுலகாளுமாமா
குரவிலாசெல்வமுள்ள கோதையுபகுகமிழந்து
சிறையினிலிருந்துவாட செய்வதுதருமந்தானோ
துரைதனிலிருந்துநீதி.

கலந்தாரிசொல் தரு.

சரியோசந்ரகுலவாசனே நானென்னசெய்குவேன்
சரியோசந்ரகுலவாசனே
சரியோயிப்படிசெய்ய னதய்யலாள்பாதவிக்க
பரிவாயிருந்துவிசனம பாவமெண்ணுமலபோச்சே (சரி)

துரியன்சொல் கந்தார்த்தம்.

தாரணிமன்னரெல்லாம் தடுத்தென்னைபேசமாட்டார்
சிரணிமைந்தனென்று சிந்தையில்நினைத்திடாமல்
யேரணிநீதிவார்த்தை யெடுத்தென்னைதடுத்துப்பேசும்
வாரணியாளேயுன்னை.

துரியன்சொல் தரு.

ட்டிவிடுவேன்பாரடி வெதிர்பேசவுமிஞ்ச
ட்டிவிடுவேன்பாரடி
ட்டிமயிர்பிடித்து ஆட்டியுனையிழுத்து
ாட்டைக்குள்ளேவிடுத்தேன் கோதைமார்புடைசூழ (வா)

துரியோதனன்சொல் வசனம்.

அடிவாடி கலந்தாரி! நீயெதிர்த்துப்பேச கோபயீரி உன்னைப்பி
த்துயிழுத்து கோட்டைக்குள்ளே விடுத்தேன் பேசாமல் யிரும்பெ
ணே கலந்தாரியே.

கலந்தாரிசொல் கவி,

அய்யய்யோவென்னசெய்வேன் அருமையாய்பெண்பிறந்து
தையலாள்சிறையிருக்க தலையினில்விதித்தவாரோ
வையகத்தோருக்கெல்லாம் வசைக்கிடமாகச்செய்தாய்
செய்வதையின்னதென்று சிவனேனுரிகுவேனோ.

கலந்தாரிபுலம்பல்-தரு.

அரனேசெக்கா தரமேன
யெனையாளுமதயா பரனே
பரனேபராபரனே உந்தன்பசந்தமிதுதானோ
வையகமாதரைப்போலெந்தன் மணவாளனைக்கலந்து

சையோகசம்பிரமெல்லாம்விட்டு தயங்கவிதித்தாயோ
யென்றுநுமெண்ணியேநான் யிந்தசிறையிருக்க
குன்னவேவைத்தாயோ அரிகோவிந்தாபென்னசெய்வேன்
செல்வதுரைமகளாய்வந்து சிறுக்குலேந்தலேந்து
பொலலாசிறையிருக்க அயன்புரிந்தவிதியிதுவோ

பொது வசனம்.

இப்படியாக கலந்தாரி புலமபி வாடியிருக்க துரியராஜன்சொல்லு கிறவிதங் காண்க.

துரியன்சொல்கவி.

நெடிமுடிமன்னரெல்லாம் நேசங்கொண்டிருக்கபந்த
கெடிபெருங்கொலுவைக்கார்க்கும் கெஜமெனும்பிரிதிகாமியா
கடிதியேநீயுமோடி கர்ண்ணபூபதியைநாடி
வடிவானயிச்சபைக்கு மகிழ்க்ஷியாய்யழைத்துவாராய்.

வசனம்,

கேளும்பிரிதிகாமியனே! யிந்தக்ஷணம் யென்தமையனாகிய கர்ண்ண ராஜனை அழைத்துவாரும் பிள்ளாய் பிரிதிகாமியனே.



கர்ணன்வருகிற கவி.

சந்திரகுலத்துவேந்தன் தானுமேயழைத்தசேதி
வந்தமேனுதரோடி மணிமுடியலங்கரித்து

கந்தமும்பரிமளிக்க கரிபரிரதங்கள்சூழ
சுந்தரகர்ண்ணபூபன் துரியன்முன்வருகின்றனே,

கர்ண்ணன்வருகிற தரு.

| | |
|---|---|
| சத்தியகர்ண்ணபூபதிவந்தார் | வெருவிதரணகுணபதி |
| சத்தியகர்ண்ணபூபதிவந்தார் | |
| சத்தியகர்ண்ணனும்வந்தார் | யெத்திசைமன்னர்கள்கொண்டாட |
| பத்தியாகயானைசேனைகள் | சத்திலுங்காவலர்சூழ (சரு) |
| பாரியமணிமுடி | வீரியனென்னவே |
| சூரியனைமந்தனும | தேரினிலேறியே (சத்) |
| பச்சைவச்ரமகுடமின்னவே | மன்னவர்சூழ |
| உச்சிதமாய்கைகடகம்துன்னவே | |
| கச்சணிமாதர்களாட | கன்னியர்கவரிபோட |
| நச்சரவமீதாடும் | நாரணன்பதம்வணங்கி (சரு) |
| ராஜனைகார்க்க | பாசமிகுச்சிடும் |
| கூசிவேபலமணி | வீசவேகாந்தி (பச்) |
| பஞ்சவர்தனக்குமூத்ததிரன் | யென்றூன்மனதில |
| சஞ்சலமில்லாத | ரணசூரன் |
| வஞ்சகத்துரியராஜன் | வந்துமேயழைத்தசேதி |
| கொஞ்சமுமரிவோமென்று | மிஞ்சியேகடைநடந்து (சரு) |
| குண்டலமாடவே | மண்டலமனைவருமே |
| கண்டுமேவணங்கிட | தெண்டமுமேந்தி (பஞ்) |
| ஆரமணிமார்பிலாடவே | சத்தமொலித்திட |
| வீரவண்டையங்கள் | கீதப்பாடவே |
| சூரர்சூரர்கண்டுவாட | சோதிமுப்புரிநூலாட |
| உத்தண்டகெம்பீரதேவர் | யுகந்துமதிசயிக்க (சரு) |
| செங்கையிலாயுதம | தங்கிஜொலிக்கதிட |
| அங்கஜனென்னவே | மங்களமாக (சத்) |

துரியன்சொல் கவி.

வந்திடும்கர்ண்ணு அண்ணு மணிபீடம்தனில்குந்து
உந்தனையழைத்தசேதி உரைசெய்வேன்மகிழ்ந்துகேளும்
சிந்துபூபதியணிந்த செல்வியைசிறையில்வைத்தேவ
சுந்தரிதனக்குதுன்பம் துடராமல்காத்துவாராய்

வசனம்,

கேளுமண்ணு கர்ண்ணமகாராஜனே உம்மை அழைப்பித்தது யேதுகாரியமென்றால் தாமும் முன்பு ஆலோசித்தபடி கலந்தாரியை

காவலில வைத்திருக்குறேன் யாராலுங் கன்னக்களவு செய்யாமலும் ஆண்காத்தடிக்காமலும் நாள்தோறும் நீபோய்ப்பார்த்து வரும்படி யாய் யழைப்பித்தேன் உமதுமனதுக் கேத்தபடி சொல்லுமண்ணா வே கர்ன்ன பூபதியே,

துரியனுக்கும் கர்ன்னனுக்கும் தர்க்கம் தரு.

ராஜகெம்பீராயிதாயுமக்கு கண்மையோபாராய்
ராஜனோனிக்க நங்கைகாவலுக்கேத்த
யோஜனைசெய்யவும் உமக்கென்னுபதில்சொல்வேன் (ரா)

துரியன்சொல் தரு.

கர்ணனேபூபா உலகுக்கெல்லாம்
கதிரொளியெவ்வர்ண்ண கன்னியை
காக்கவருத்தமேன் படவேண்டாம
உன்னையன்றியேநம்பி யொருத்தரைவைப்பேனோ

கர்ணன்சொல் தரு.

எளியவர்காவல்காக்க யெடுத்துநீசொல்லாமி
குளியுமபருவமுள்ள குழந்தையைசிறைவைத்து
அளியுமபுண்ணுக்குவ அழுகல்லயுமக்கிது (எளி)

துரியன்சொல் தரு.

காடுகண்டாரேபஞ்சவர் மனம்வாடுகின்றாரே
நாடுமேபேரிழந்து நளியுமபாண்டவர்பெண்ணை
தேடிவருவதெப்போ தீராப்பகையுண்டாச்சே (காடு)

கர்ணன்சொல் கவி.

பஞ்சவர்போனாலென்ன பாராளுமன்னரெல்லாம்
அஞ்சவும்விருப்பமுள்ள அல்லியுமசுகித்திருக்க
வஞ்சியுமவந்துகேட்டால வகைசொல்லவுயணமுண்டோ
யென்சொல்மேன்பதிலுனக்கு யிதுநலமல்லகண்டாய்

வசனம்.

கேளும் துரியபூபனே பஞ்சபாண்டவர்கள் கானகப்போனாலென்ன மதுராபுரி அல்லியானவள் உலக மன்னரெல்லாம் நடு நடுக்கும்படி அரசாக்ஷி செய்திருக்க அவள் மைந்தனுக்கு வயதுவந்திருக்கிறது அல்லியானவள் மருமகனை வேண்டிவந்தால் பதிலென்ன சொலவது யிதையறிந்து கடவும் துரியராஜனே.

துரியனுக்கும கர்ண்ணனுக்கும் தர்க்கம் தரு.

பருவமில்லாதவார்த்தைகற்றாய் அந்த
அரிவையைப்பெரிதாகச் சொன்னாய்
செருவிஅல்லியாளென்றும் கேட்டிருப்பார்கொஞ்சம்
கெட்டிகாரியுபவந்தால் வெட்டிவேனிருதுணடாய் (பரு)

கர்ணர்சொல் தரு.

இசுதணமேவந்தஅல்லிமுன்னே யிணக்கமில்லாவார்த்தைசொல்லி
வாசவனெதிர்த்தாலும வதைசெய்வனேநொடிக்குள்ளே
வாட்டுவேனென்று மேட்டிமைபேசாதே (யி)

துரியன்சொல் தரு.

பெண்ணாய்ப்பிறந்தவளாலே வெல்லும
பெருமைவரா தொருக்காலே
மண்ணாளுமரசியை மடிக்கவீரியமுண்டு
வந்தாலுமவரட்டுமநீ நொந்துபேசவேண்டாம் (பெ)

கர்ணன்சொல் தரு,

நின்முகன்றனேவென்றமாது மன்னா
நீர்சொல்லுமவீரிய மிப்போது
தேன்மொழிஅல்லியை தெரிசிக்கப்பார்த்தோடும்
தேடாதேவீண்பழி கூடாதுசெயல்சொள்ள (நின்)

துரியன்சொல கவி.

வில்லினிலதிகதீரா வீரியகர்ண்ணபூபா
அல்லியுமவந்தாலென்ன ஆபாசப்படுவதுண்டோ
சொல்லியபடிநடக்க சோக்கியேமனப்வாட்டாமல்
மெல்லியைபாதுகார்த்து மேன்மையாய்வருகுவீரா.

வசனம.

கேளுமன்னா கர்ண்ணபூபனே அந்த அல்லியாளைவன்கோபித்து நம்மிடபேரில் படையெடுத்து வந்தால் அச்சப்படலாமோ நீர் மனம் வாட்டாமல் யெனசொர்ப்படி கலந்தாரி நிசி போகாமல் பாதுகார்த்து வாரும் கர்ண்ணமகாராஜனே.

கர்ண்ணன்சொல் கவி,

செப்பியதுரியபூபா செல்வியைமனக்களிக்க
அப்படிதாமேகார்க்க அதற்கொருதடையுமில்லை
ஒப்பாமலெந்நாளும் புன்மொழிகடுப்பதுண்டோ
இப்பவும்காவலாக யேகிகான்வருகுவேனே.

வசனம்.

கேளும் சூரியபூபனே யெந்தநாளும் உமதுவார்த்தைக்கு பதில் சொல்வதுண்டோ, தடையில்லாமல் கலந்தாரியை பாதுகாத்து வருகிறேன மகாராஜனே,

வேறு வசனம.

இப்படிகர்ண்ணமகாராஜன் பாதுகாத்துவரும்போது விசேஷபுண்ணியகாலத்தில் கசிநதியாடிவர யெண்ணங்கொண்டுகலந்தாரியைப்பார்த்து சொலலுகிற விதங்காண்க.

கர்ணன்சொல் தரு.

கன்னியர்க்கரசியான கஞ்சமலரஞ்சிதமே (கரு)
காசியைக்காணவே யோசனையெண்ணியே
வாசமாய்வந்தனே நேசமாய்விடைதரும் (கன்)

கலந்தாரிசொல் தரு.

சுந்திரமாமாயெந்தனுக்கு துன்பமவந்தணுகிடாமல் (சுரு)
துன்னியமாமனே யென்னிடகாவலும்
யென்னைவிட்டுமே செல்வதுநலமோ (சுங்)

கர்ணன்சொல் தரு.

இந்தகோட்டைதன்னைசுத்தி யிருக்கும்வீரர்காவல்கோடி (சுரு)
எப்படியுனக்குமே தப்பிதம்வந்திடும்
செப்புவாய்மாமணி ஒப்பியேவிடைதரும (இந்த)

கலந்தாரிசொல் தரு,

ஆசையுள்ளயெந்தன்மாமா ஆருமோயுனைதடுக்க (சுரு)
அநதமாகிய சிந்தகளித்துமே
சூந்தகமில்லாமல் வந்திடுவீரே (ஆசை)

கர்ணன்சொல் கவி.

மடமயிலாளுமநல்ல வாக்குகளுரைககும்போது
திடமுடனமைச்சருக்கு திட்டவட்டங்கள்கூறி
அடைவுடன்சேனைசூழ யாத்திரைசெய்யவேண்டி
வடதிசைதன்னைநோக்கி வருகிறான்கர்ணராஜன்.

கர்ணன்சொல தரு.

காசிவிஸ்வநாதரியென்னை காருங்விசாலாக்ஷியென்றும்
மாசிலாதகர்ண்ணபூபன் மகிழ்சியாய்தானடந்தான
அங்கதேசந்தாண்டிநல்ல அஸ்திநபுரியைவிட்டு
மங்களமாய்கர்ண்ணராஜன் உலமையவனந்தாண்டி

தேசதேசங்கள்தாண்டி
காசிநதி மூழ்கி
வேதவிதிப்படிக்கி
பாதம்பணிந்துநின்று

தீர்த்தவாரியுமாடி
கண்டுதானங்கள்செய்து
விஸ்வநாதனைத்தொழுது
பத்தியும்புரிந்தாரே.

கர்னன்சொல் தேவாரம்.

மாசிலாமணியேபோற்றி மாபதியணிந்தாய்போற்றி
வீசியகமலபாதம் வேதவேதியனேபோற்றி
தேசிகா திருமுக்கணணு செஞ்சடையாளேபோற்றி
காசிவிஸ்வேசாயெந்தன் காருண்யதேவேபோற்றி.

வசனம்.

இவ்விதமாகக் கர்ன்ன மகாராஜன் விஸ்வநாதரையும் விசாலாக்ஷியம்மனையும் தெரிசித்து அங்கு சிலநாளிருந்து புண்ணிய தீர்த்தமாடிவரும் காலத்தில் பாண்டியநாட்டுக்குரிய அல்லியரசாணிதமதுகொலுவுக்கு வருகிறவிதங் காண்க.

அல்லிவருகிற கவி.

அண்டாண்டபுவனமெல்லாம் நடுநடுங்க
ஆக்ரமித்துவிலபிடித்து கெதைவாளேந்தி
மண்டலமெல்லாமதுதிக்கும் மகுடம்பூண்டு
மாணிக்கவச்ரஆரம சோதிமின்ன
கண்டவர்கள்திடுக்கிட்டேவ பவளசேனை
கனகமணிசித்ரவல்லி மாதர்சூழ
தண்மையுடன்வெண்டையங்கள் சிலம்பாட
தனிமதுரை அல்லிகொலு வருகின்றாளே.



அல்லிவருகிற தரு.

அதிகசுந்திரமுள்ள
அல்லியரசாணிவந்தாளே

மதுரைக்கரசியான
முரசுகளதிர

அல்லிராசாணிவந்தாள்

கதிர்மணிமுடியின்ன கடகம்பளடனென்ன
ஐச்சணிமாதர்களோட உச்சிதக்கவரிபோட (சரு)
காதிற்குண்டலம் சோதிமிகுந்திட
பூகலியெச்சரிய கோகிலாரூபி (அதி
சங்கஆரமிலங்க தையலராலத்தியேந்த
நித்தைமகிழ்ச்சியாக சேனைகாவலர்சூழ (சரு
தீரமாகபல வீரியர்வாளினை
பாரியசிலையுடன் மீரிகைகொண்டு (கா)
சித்திரக்கமலவல்லி சிறந்தபவளவல்லி
பதியாகதாதிமார்கள் சுத்திலும்நெருங்கிடவே (சரு)
பரிமளகளபமும நறுமலர்வீசவே
அருமைபாய்நவமணி பெருகொளிவீசவே
தண்டையுங்கொலுசுமிலி வெண்டையங்கள்கீதம்பாட
சண்டனுமடுக்கிடவே கொண்டலேடிபேரியாட (சரு)
சத்தத்தாளமுடன மத்தளசுத்தியும
மெத்தவேதொளியுடன் ஒத்துமுழங்கிட (தன்)

அல்லிசொல் கவி.

மந்திரிபவளசேனை மணிசித்ரவதியேகேளாய்
சந்திரகுலதேசம் துலங்கியெனுருமைவாழ்க
குந்தகம்வந்திடாமல் குலதெய்வமாகநின்ற
விந்தைமீனாக்ஷியம்மன் மலரடியடியாள்போற்றி.

வசனம்.

கேளும்மந்திரியென்னும பவளசேனையே அடி சித்திரவல்லியிந்த தென்பாண்டியதேசமாகிய மதுரைப்பட்டணத்தில் ஒருகுறைவும்வந்திடாமல் நமது குலதெய்வமாகிய மதுரைபட்டணத்தை ரக்ஷித்துவரானின்ற மீனாக்ஷியம்மன் சொக்கநாதருடைய பாதாரவிந்த கமலங்களுக்கு அடியாள் அனேகவந்தனங்கள்செய்து நமஸ்கரித்து நின்றேன் தாதிகளா.

அல்லிசொல் கவி.

நலமுள்ளகமலவல்லி நங்கையேபவளவல்லி
பலமுள்ளசித்ரவல்லி பாவையேசொல்லக்கேளாய்
குலமுள்ளவிஜயனுக்கு கோதைநான்மாலையிட்டு
வலுவுள்ளமகனைப்பெற்றேன் மருவழியரிகிலேனே.

வசனம்.

கேளும் மந்திரியாகிய சகிமார்களே நானந்த விஜயபூபனுக்கு மாலையிட்டு புலேந்திரனென்னும் மைந்தனை யீன்றெடுத்தேன் பின்புவெகு நாளாய் யென் கணவன் வரக்காணேமே அதைவிபரமறிந்து சொல்லுங்கள் தாதிமார்களே,

தாதிகள்சொல் கவி.

தேவியே துரியராஜன் செய்தவஞ்சகத்தினாலே
மேவியேநாடுபூமி விளங்கியபெருமையெல்லாம்
பாவிகள் சூதினாலே பரித்திடவுந் மன்னர்
ஆவியுங்கலக்கமாகி ஆரண்யஞ்சேர்ந்தாரம்மா.

வசனம்.

கேளும் அல்லியரசியே கபடவஞ்சகரான துரியோதினன் யிந்திரப்பிரஸ்த்திலிருந்த பாண்டவாளை அஸ்தினாபுரிக்கு வரவழைத்துமாமன் ஜகுனியை விட்டு சூதாடி பாண்டவாளுடைய நாடுராஜ்யமுதலானதும் பரித்துக்கொண்டு ஆரணயம்ஓட்டிவிட்டார் அதனாலேயுமது நாயகன் வரவில்லையம்மா தாயே.

அல்லிசொல் தரு.

துரியன்
அப்படிக்கொத்தபிலவானு குலவானே
இப்படிசெய்ய யெண்ணமிலலாமலே
எப்படி ஐவரை சேர்ப்பதுநீதியோ (அப்)
செப்படிகான்கம் யாகத்தைஐவர்கள்
ஆராலும்செய்யாத போகத்தை
பேர்கொண்டுசெய்தார்கள் போர்செய்துவெல்லாமல
போராசகக்கொண்டுமே செய்துகெலித்தானே (ஆ)
ஈராசகுருதுகள் கட்டுவேன்மிப்போ
தோர்க்கசெய்தவனைநான் வெட்டுவேன்
சேர்த்துவிசனைதவாளால் படைகூட்டிகொடிக்குள்ளே
பார்க்குரேவைவன்திரம் கண்டிப்பேனவர்காண (தோ)
கார்ககனிவன்வந்தாலும்

தாதிகளசொல் தரு.

அந்த
பத்தினியேகோயம்கொள்ளாதே விள்ளாதே
பஞ்சவர்கள்சபதம செத்துமடிவார்கள்
சந்தேகாலம்சென்றாலும் கொடிக்குள்ளேயார்க்கலாம (பத்)
துரியன்பண்டகளெல்லாம்

அல்லிசொல் கவி.

கோபம்கொள்ளாதேயென்ற கோதையென்தாதியரே
பாவமுமிதனலுண்டோ பாவையென்கோபந்தீர
சாபமுங்கரத்திலேந்தி சடுக்கெனவேட்டையாடி
பூபதியோருமஞ்ச பிரியமாய்வருகுவீரே.

வசனம்.

பாண்டவாளுடைய் சபதம்நிரவேரும்படி யென்கோபத்தை யா ற்றவந்தது சரியானநீதியாகும் யெனக்குவந்த கோபம் வீண்போகா மல் வனவேட்டையாடவேணடும் போகலமா வாஙகளடிசகிமார்களே

வேட்டையாடுமெ தரு.

வேட்டையாடுவம் வாருங்கள்
வெகுரதகஜதுரக பதாதிகளுடனே (வே)
கூட்டம்கூட்டமாய்சேனை நாட்டமுடனேவர
காட்டுப்புலிகரடி வாட்டமாயோடிங்கு (சரு)
காட்டுவேனேவீரம் வாட்டுவேனேகாத
வீரக்கொடி மாதரேவாருங்கள் (வே)
மதுரைக்கடுத்தகாட்டில மானுமபன்றிகள்சிம்பம்
யெதிராகயோடுது யெடுத்துவிடுங்களம்பை(சரு)
யெகிரியெகிரியே பாயுதுபாயுது
நகரநகரவே சாயிதுபாரிதோ (வே)
விட்ட அருமசரங்கள் பட்டுபட்டோடுதே
வட்டம்புலிக்கரடி வாட்டிகொண்டோடுதே(சரு)
வருகவருகவே பூட்டிடபாணம்
உருகஉருகவே யோடிகானகம் (வே)
மானும்கலையுஞ்சிஙகம மதயானையுமசென்றால்
யேனைமுயல்களெல்லாம யெகிரிகுதிக்துவிழ(சரு)
வெட்டிவெட்டியே துண்டுகளாடவே
யெட்டியெட்டிசரம் கொண்டுமேஜுவே (வே)

அல்லிசொல் கவி.

வேட்டைகளாடிக்கொண்டு வெகுவனம்கடந்துவந்தோம்
வாட்டமாய்மிருகமெல்லாம் வகையுடன்சங்கரித்தோம்
மூட்டியவனவினாலே முடிசோரவாடினேந்தேன்
நீட்டியவனத்தில்சற்றே நித்திரைசெய்குவேனே.

வசனம்.

கேளும் சகிமார்களே நாமெல்லோரும் வேட்டையாடி வெகுவனம்கடந்து வந்தோம மெனக்காலல் சூரியன் உஷ்ணத்தினலேயும் காட்டு கானகினலேயும், யெனக்காலல் சீசாபமாய்வருகிறது யிவ்விடத்தில்சற்றுநேரம்நித்திரைசெய்துபட்டணம்சேருவோம சகிமார்களே

அல்லிநித்திரை தரு.

நித்திரையானளே அல்லியரசாணி
நித்திரையாகினளே
நித்திரையாகினள் மெத்தையின்மீதினில்
சத்திமீனுகூஷிபாதம் பத்தியுடனினைந்து (நித்)
காரார்குழலிமாதர் மாராமல்கவுரிபோட
சிரானமணிமுடி சிரந்தபணிகள்மின்ன (நித்)
சுந்திரமாகவே சொக்கநாதருமவர்
வந்துபாரிசாதம் மலர்கள்கையில்தரிக்க (நித்)
மகனும்கலந்தாரிவை மருகாவிட்டல்நாளே
சிகாரமதன்பின்பு செல்வகில்லையெனவே (நித்)

அல்லிசொல் கவி.

கர்ப்புள்ளசித்ரவல்லி கன்னியென்தாதிமாரே
பொர்ப்புடன்நித்ரைசெய்யும் போதுநான்மகிகூஷியாக
சொர்ப்பனங்கண்டெழுந்தேன் சொல்லுவேனின்னதென்று
நர்ப்பொருளரிந்தெனக்கு நலமுடனுரைத்திடீரே.

வசனம்.

கேளுங்களடிதாதிமார்களே நானித்தபஞ்சணையில் அசந்துநித்திரைசெய்யும்போது அதிசயமான சொர்ப்பனமகண்டேன் அதைசொல்லிவருகிறேன் அதர்க்குப்பலன்களை சொல்லுங்களடி தாதிமார்களே.

சொர்ப்பனக்குறிசொல்-தரு.

சொர்ப்பனக்கண்டேனடி தாதிமாரே
சொர்ப்பனக்கண்டேனடி
சொர்ப்பனக்கண்டேனடி துலங்கும்பஞ்சணைமீதில்
பொர்ப்புடன்நித்ரைசெய்யும் போதுமங்களமாக (சொ)
அன்னைமீனுகூஷிபம்மன் அழகுசொக்கநாதரும்
கன்னியென்முன்வர கண்டுநான்தெரிசிக்க (சொ)
பாரிசாதமலரை பரிவாயெனக்களித்து
கூரினுரொருபுன்மை குலங்தழைத்தோங்கவும் (சொ)

மைந்தன்மனேவிதனை மருகாவிட்டால்நனே
சந்ததியதன்பின்பு தானில்லையென்றுபோக(செ)

வசனம்.

கேளுமதாதிமார்களே நமது சொக்கநாதக்கடவுளானவர் யெனது சொர்ப்பனத்திலேவந்து நாளையதினம யெனதுகுமாரன் மனைவியைசேர்த்தால் நலபுத்திரனுண்டாகி பாண்டியன்குலம் விர்த்தியாகுமென்றும் அப்படிசேராவிட்டாலகுலம்விளங்க மருபடிசந்தானமில்லையென்றும் சொல்லிப்போய்விட்டார் தாதிமார்களே.

தாதிகள் சொல் வசனம்.

கேளுமம்மாதாயே சொக்காதர் உன்கினவில்வந்து சொல்லிபோனது யெவ்வளவும் பிசகாது அப்படியே நடத்திவையுமம்மாதாயே.

அல்லிசொல் கவி.

கனவதுகண்டுயெந்தன் கருத்தினிலிருக்கும்போது
வனமதுவிட்டுயெல்லாம் மதுரைமாநகரமவந்தோம
மனமதுமகிழ்வாக மைந்தனையிச்சணைக்கு
அனைவருமனக்களிக்க அழைத்துமேவருகுவீரே.

வசனம்.

கேளும் பாங்கிமார்களே கெனவு கண்டு வாதைகொண்டு வனம்விட்டு மதுரைக்குவந்தோம் யெனது மைந்தனுகிய புலேந்திரனை அழைத்துவாருங்கள் தாதிமார்களே.



புலந்திரன்சொல் கவி.

அன்னையுமழைத்ததேதி அரியவேமனைப்பூரித்து
பன்னீருகளபப்விச பலவிதமணிகள்கொஞ்ச

உடன்னிதகொலுசுதண்டை ஒலியுமேகலசலென்ன
புன்னைமாமலரணிந்து புலந்திரன்வருகின்றானே.

புலந்திரன்வருகிற தரு.

சந்திரகுலத்தில்வந்த தனஞ்செயன்ராஜன்பெற்ற
சந்திரவதனமதுனனவே புலேந்ரராஜன்
சூரியன்போல் வந்துமேவினான்
கொடிகொண்டைஜடையழகும் சிறந்தபணிகள்மின்ன
கட்டழகிதான்களிக்கவே புலந்திரராஜன்
காமனைப்போல் வந்துமேவினான்
பாதத்தண்டைகிதமபாட பஞ்சவர்ணகிளிகள்கொஞ்ச
மாதர்கள்கவரிவீசவே புலேந்திரராஜன
மகிட்சியுடன் வந்துமேவினான்
செழித்தநகரமாமதுரை செங்கோலாளுமமாதாசி
அழைக்கப்புலந்திரராஜன் ஆசையாகவந்துமேவினான்

புலந்திரன்சொல் கவி,

விண்ணோருமிந்ரன்தேவர் மேதினியோருமெச்ச
வெண்ணுதசொக்கநாதர் யிணையடி துணையினாலே
மண்ணாளவந்துதித்த மாதாவேபாதம்போற்றி
என்னைஅழைத்தசேதி நலமுடனறிவிப்பாயே.

வசனம,

கேளும்வானுலோகத்தாரும பூலோகமன்னரும்மெச்சும்படியாக சொக்கநாதர் மீனாக்ஷியமமன் பாதாரவிந்தத் தயவினாலே பாண்டிய தேசத்தை யாண்டுவருமமாதாவே உமதுபாதாரவிந்த கமலங்களுக்கு அனேகவந்தனம் வந்தனம அடியேனை யழைப்பித்த விபரம் தெரிய சொல்லுமம்மா தாயே,

அல்லிசொல் கவி.

மைந்தனேவாழியின்று மனவிலையசேராவிட்டால்
சந்ததிமருபடிக்கி தானில்லையென்றுசொக்கர்
வந்துயென்கனவில்சொலல மகிழ்ந்துன்னையழைத்தேனப்பா
சிந்தையுனமகிழ்ச்சியாக தேவியைகலந்துவாராய்.

வசனம்.

கேளும்குமாரகா யின்றையதினம நல்லசுபதினமா யிருப்பது யின்னளில் உன்மனைவியோடு மருவிகால் பட்டத்துக்கு யோக்கியமான பிள்ளைபிறக்கும் யென்று யிதுதப்பினால் உனக்குசந்ததி பிறக்காதென்

றும் சொக்கநாதர்யென கனவில் சொல்லியிருக்குறார் நீசந்தோஷமாய் போய்வாருமப்பா குமாரகா.

புலந்திரன்சொல் தரு.

போமென் றுயெந்தனை யுரைத்தாயென்னிடதாயே
காமருபிணைத் காணவே
பொய்யோயிந்தவசனம மெய்யோநீமொழிந்தது
துய்யமனையாளை தையலைநான்கண்டதில்லை (போ)

அல்லிசொல் தரு.

கண்டறியேனென்றுபேசுராய் யென்கண்மணியே
தொண்டமனையாள் தன்னையே
காணயுனக்காரிதோ வீணோநான்தந்தமொழி
நாணயில்லாமலே யின்னெறியானைச்சேர (கண்)

புலந்திரன்சொல் தரு.

சித்தமிகவைத்துப்பேசுராய் யென்னிடதாயே
குத்தமறியாமல்பேசுராய்
தேசமறியக்கொண்ட ஆசைமருமகள்மேல்
பாசமெள்ளளவும் நேசங்கொண்டேயுருகி (சித்)

அல்லிசொல் தரு.

காத்துள்ளபோது தூத்துமென்றுமே
யென்கண்மணியே
பார்த்திருந்துறுத்தவேணுமே கண்ணேமணம்புரியபெண்ணே
கலந்துவரவண்ணமில்லாமல்பேர்க் குண்ணிமொழியலாமோ (கா)

புலந்திரன்சொல் கவி.

வர்ண்ணமாமுடியணிந்த மாதாவேதுரியராஜன்
சொர்ண்ணமாங்கோட்டைக்குள்ளேதோழிகளுடனேவைத்து
கர்ண்ணனும்காவலாக கலந்தாரிதன்னைக்கண்டு
யெணமாவருவேனமமா யெனக்கொரு திடமசொல்வாயே.

வசனம்.

கேளுமம்மாதாயே கபடவஞ்சகனென துரியோதிரன் தனதுதங் கைபுத்திரியான சொந்தத்திலேலே சொர்ணமயமானகோட்டைகட்டி. தாதிமார்களுடனே கர்ண்ணபூபனைகாவலாகவைத்து யிருப்பதென்று நீ கேழ்விப்பட்டிருக்குறாய் நானெப்படி அவளைகாண்பது அதைவிப ரமாகச் சொலலுமம்மாள் தாயே,

புலந்திரனுக்கும் அல்லிக்குமதர்க்கம் தரு.

இந்திரன்பதம்நாடி — னொந்துநான்வாட
யெட்டுதிக்குமஞ்சவந்த — பரிசேயருமப்பா
விட்டிரவதிகோட்டைக்குள் — சேரும் (இந்)

புலந்திரன்சொல் தரு.

ஆகாயபரிமீது — போகநான்இடமாகி
அன்பாகயென்தன்மனம் — சகித்தேனே
யின்பசாகரத்தில் — குளித்தேனே (ஆ)

அல்லிசொல் தரு.

காட்டவேமனைவிக்கு — வாட்டமில்லாமலே
இணையாறிமார்பதக்கம் — யெடுத்தேனே
மணமாலைதாம்பூலங்கள் — கொடுத்தேனே (கா)

புலந்திரன்சொல் தரு.

தந்தமணிதாம்பூலம் — கைதமலருள்ளதுந்தாயே
உனைவணங்கி — பெத்தேனே
சோபனும்பதனமாய் — வைத்தேனே

அல்லிசொல் தரு.

வில்லம்புகேடையம் — நல்லவாளாயுதம்
விருதுகளுள்ளதெல்லாம் — யெடுத்தேன்
வெரிதானவிதமெல்லாம் — கொடுத்தேன்

புலந்திரன்சொல் தரு.

பத்தியாய்நீதந்த — வெத்திதருமாயுதம்
பாதமவணங்கியெல்லாம் — வாங்கினேன்
பூதலமதடுக்கவே — தாங்கினேன்

அல்லிசொல் தரு.

அம்மன்மீனாக்ஷியின் — திருவருளிருக்கவே
அச்சமெந்தனுக்கேது — வருவேனே
உச்சிதமாகஜெயம — பெறுவேனே

வசனம்.

இப்படியாக தாயாரிடத்தில் விடைபெற்றுக் கொண்டு புலந்திரன்மதுரையைவிட்டு அஸ்தினாபுரிக்குவர பயணமாகிறான் அப்போசூரியன் அஸ்தமாகி ராத்திரிகால மாகவே கலந்தாரி சொல்லுகிற விதனை காணக.

கலந்தாரிசொல் கந்தார்த்தம.

வஞ்சியென்தாதிமாரே வடமேருதன்னைச்சுத்தி
நெஞ்சுடரோனும்போக செய்வகைதன்னைமுடித்து

அஞ்சாமல்காவலாகி அனைவரும்விழித்திருங்கள்
பஞ்சணை தன்னைச்சேர்ந்து.

கலந்தாரிசொல் தரு.

சயனித்துக்கொண்டடி — தாதிகள்மாரே
பவளித்துக்கொண்டடி
பவளித்துக்கொண்டடி. — பஞ்சணைமீதினில்
படுத்துநித்திரைசெய்வேன் — பாங்கிமாரேயிருங்கள் (ச)

பொதுவசனம்.

இப்படியாக கலந்தாரி நித்திரைசெய்ய புலந்திரன் வருகிறவிதங் காண்க.

புலந்திரன்வருகிற கவி.

சரிகைபட்டாடையாரம சரப்பளிபதக்கம்பூண்டு
சொருகுபட்டயக்கட்டாரி துலங்கியசில்லவாளேந்தி
பெருகியவாடைவீச பெண்படைமதனைவொன்ன
புரவியிலேறிக்கொண்டு புலந்திரன்வருகின்றானே.





புலந்திரன்வருகிர தருசிந்து.

சததமேகப்புரவியேறி — நல்ல
சந்திரகிரணமபோலே — அந்தரத்தில்மீறி

சுத்தவீரனைநான் வாடைநல்ல
சொல்லரியதேவர்கண்டு வல்லமைகொண்டாட
ஆடையொலலாமெகெந்தம்வீச நல்ல
அங்கசனெனவேயெங்கும் துதியேச
கோட்டைமிடியே லதட்டி பீரிநல்ல
குற்றமற்றதனமனே விசித்திரமாயேரி
மிச்சையுள்ளபலபணிகள் பூண்டபின்பு
மித்தவேள்ளைசூரியனும் வந்தெதுககக்கண்டு
கச்சைகட்டிசல்லடமிட்டு நல்ல
கட்டழகன்மாமதுரை பட்டணமவிட்டு
வட்டவிழிமாதுக்கோட்டை கண்டானப்பேச
வாடியவளிடத்தில் போகநாடினான்
பொட்டெனபுவிக்கோட்டை குள்ளேவாநது
பூமியிலிரங்கிடவே காமியவனும் (தக்)

புலந்திரன்சொல்-சீசபத்யம.

கன்னைகமை சூடியே சங்காரனருளாலே
கந்தமிகுந்திடுமகோட்டையை வந்துகண்டேன்
சிங்காரமாளிகை ரவர்த்னதூணுகள்
இசழ்சித்ரகலசமும் தேவபதிபோ
தெங்குமகுளோப்புகள் செய்தகண்ணாடியும்
துலங்கிடயிருகண்கள் பார்க்கவசமோ
அங்கங்கேகபதுமைகள் அலங்காரகலசமும
ஆணிமுத்துகள்போலவே கொஞ்சம்
அதன்வடிவுமெங்கெங்கும் மிருபோல்தானும
துக்கப்பிரகாசமணி கத்திலழகும்தங்க
இலுட்டிடனசார்ந்த கதவும்
மங்கையாளதான்பூட்டின மாளிகையீதுவே

புலந்திரன்சொல் தரு.

வர்ணப்பசுங்கிளியே பெண்ணேயென் கண்ணே
மதியோதிலுமிட பெண்ணே
கர்ணான்காவலைதப்பி கணையன்வந்திருக்குறேன்
சொர்ணக்கதவைதிறப்பாய் பெண்ணேகண்ணே (சொ)
நெடுநேரமாகவந்து சிந்தித்துகான்றியங்கி
உதில்கோபத்தாலபூட்டை கத்தியால்வெட்டிடியே
கதவைதிறந்துவந்தேன பெண்ணேகண்ணே
கதவைதிறந்துவந்தேன் பெண்ணே

| | |
|---|---|
| ரத்தினங்கள்ஜொலிக்க | சுத்திலும்விளக்கெரிய |
| மெத்தையின்மீதினில் | சித்திரப்பதுமைபோல் |
| நித்திரைபோராயோ | பெண்ணே கண்ணே |
| நித்திரைபோனாயோ | பெண்ணே |
| கண்டுதவித்தேனடி | பெர்தனாசைகொண்டு |
| செண்டுபோல்தனங்கள்தன்னை | கண்டுகரங்கள்ரெண்டும |
| கொண்டுபணைக்குதடி | பெண்ணே கண்ணே |
| கொண்டுபணைக்குதடி | பெண்ணே |
| அஞ்சுபிராயத்திலே | அறியாதகாளையிலே |
| வஞ்சியேதேவர்கள்சாக்ஷி | மாலையிட்டவானடி |
| பந்துக்கள்காண | பெண்ணே கண்ணே |
| மாலையிட்டவானடி | பெண்ணே |
| பஞ்சவர்ணக்கிளியே | பவனித்துநீயிருக்க |
| கொஞ்சியேநானிங்குநின்று | தவிப்பேனோரஞ்சிதமே |
| வட்டவிழிமானேயெழுந்து | வாவென்றென்னையழைத்து |
| கட்டித்தழுவியேநீ | யின்பசுகந்தந்தால் |
| கடைத்தேறிபோவனடி | பெண்ணே கண்ணே |
| கடைத்தேறிபோவேனடி. | பெண்ணே |
| யித்தனையுமுரைக்க | உன்சித்தமிரங்காமல் |
| நித்திரைப்போகவே | யென்மனம்தாளாமல் |
| கத்தியால்தட்டினனே | பெண்ணே கண்ணே |
| கத்தியால்தட்டினனே | பெண்ணே |

கலந்தாரிசொல் கவி.

தட்டவேதிடுக்கிட்டேங்கி சயனசொற்பனமோவென்று
திட்டெனகண்விழித்து தினகரன்வடிவமுள்ள
கட்டழகனையுங்கண்டு கைகாலுய்நடுக்கங்கொண்டு
திட்டெனத்துணைபத்தி சேரிகாளமீரிகானே.

கலந்தாரிசொல் தரு.

| | |
|---|---|
| ஆரடாநீயிங்குவந்தவன் | அடடாதுரோகி |
| ஆரடாநீயிங்குவந்தவன் | |
| ஆரடாகோட்டைக்குள்ளே | அச்சமில்லாமல்வந்து |
| தாருமாறாய்வார்த்தைசொல்லி | தட்டியென்னையெழுப்பிட |
| கர்ண்ணராஜன்காவலிருக்க | சுத்திலுமகோடி |
| கன்னியருமகாவலிருக்க | |
| வர்ண்ணமானகோட்டைக்குள்ளே | வந்தவனைத்தலூரடா |
| மன்னவனென்றுலுமுன்னே | மடிக்கவீரியமுண்டு (ஆ) |

யெந்தனுமேலே நீமடியமே  விதியின்வண்ணமடிவந்துமுடியமே
சொந்தகணவனென்னைதொட்டிட  பயந்திருக்க
அந்திஜாதியே நீயும  யெந்தவிதமாயிகருவந்தாய் (ஆ)
ஆருஅபமான்மாரிருக்கபின்னம  ஐந்துபேருப உன்னைநருக்க
ஆருமெதிரிலா அல்லியுமிந்தை  யரிந்தால்கூருகூராயுன்னை
வெட்டிகொடுப்பாள்  காகத்துக்கினர (ஆடா)

அலந்தாரிசொல கவி

பேசாமலிருப்பதென்ன பிணமதின்னும்பூதமோதான்
கூசாமலிகருவந்து கொண்டுமேயுருவமாத்தி
தாசாதிதாசனென சாற்றுவாய்வந்தசேதி
வீசாதுமவிசியென்றால் விருதாவாய்மடியப்போறாய்.

வசனம்,

கள்ளனேதிருடனே பேசாமலிருப்பதைப்பார்த்தால் பூதபிரேத பிர்ம்மராக்ஷத்தானே யிப்படி உருவமாத்தி வந்தது தெரியவில்லை தாசாதிதாசனாய் யெனைவணங்கிவந்த சமாச்சாரத்தைசொல்லாமலயென்றுமேலேவிருதாவாய் நீர்மடியவேண்டாம் ராஜனே.

புலந்திரன்சொல் தரு.

யெத்தனைசொன்னாலுமென்ன  குத்தமாவதுண்டோபோடி
யேசுராய் வீனாய்  யேசுராய்
சித்திரக்கலாபம்கண்டு  தத்திவிளையாடுவோம
அன்னமே, அடி  சொர்ன்னமே(தரு)
தேடியேவந்தனே  கூடிகளிக்கநாம்
மோடிசெய்வது  வேடிக்கையல்லவோ (யெ)

கலந்தாரிசொல் தரு.

யென்னசேருமென்றமிஞ்சி  சொன்னாலவகண்டிப்பேனுன்
யேதடா வருமை  தீகடா
கர்ன்னன்பூபன்தன்னையிப்போ  பின்னேரபவாவலமுக்கா
கண்டிப்பேன் உன்னை  துண்டிப்பேன் (தரு)
கள்ளனேபாவிகை  உள்ளமேவர்கிட
துள்ளவேயுன்தலை  தள்ளுவன்வெட்டி (யெ)

புலந்திரன்சொல் தரு,

ஆண்டன்கஞ்செய்தபோதுயென்னை  கண்டுசுமமாபோவதுண்டோ
சொல்லடி மதனே  வெல்லடி
அண்டிமதன்பஞ்பாணன்  கொண்டுயென்னைஜாடுகிறான்

அழகனடி யென்னை தழுவனடி (சரு)
அட்டியில்லாமலே கட்டியணைந்திட
தொட்டியெழுத்திட இட்டமாகவந்தேன் (து)

கலந்தாரிசொல் தரு.

தொட்டிழுக்கவந்தேனென்றாய் வெட்டியெறிவேனுன்னை
சொல்லடா வெட்ட இல்லடா
பட்டணத்திலுன்னைக்கொண்டு விட்டுபங்கப்செய்யச்சொல்வேன்
பாரடா பதி சேரடா (சரு)
பாவியேநீயுமே தாவியேவந்திட
ஆவியழிந்திட தேவர்கள்காண (பட்)

புலந்திரன்சொல் கவி.

உலகாளுமாமனாரும உகந்தவீரியருமைவர்
பலசாலிஅல்லியென்றும் பாரெலாமரிந்திருக்க
நலமானகோட்டைகருள்ளே நாயகன்கணவனல்லால்
குலாவிடமனந்துணிந்து கூசாமலவருவதுணையோ.

வசனம்.

கேளும் பெண்மயிலே உலகமெல்லாம ஆளப்பட்ட அடிமாமன் மார்கள் நாருபேரிருக்க யாவருக்கு மடஙகாத அல்லியரசியுன் மாமியாரிருக்க சத்தேனும அச்சம்பயமில்லாமல உன்நாயகனைவிட தேவர்கள் அசுரர்கள் உன்னைச்சேர ஒருக்காலும வருவார்களோ நன்றாயோசித்துபாரும் கலந்தாரியே.

கலந்தாரிசொல் தரு.

கணவனாவென்றசெல்லியே ஆங்காரவீரம
காட்டவந்தியோ வாட்டுவேன்பாராய்

புலந்திரன்சொல் தரு.

வாட்டவீரியம காட்டலாகுமோ
அடிபெண்ணே கண்ணே
வாதொருமுத்தம் தந்திடாமலே

கலந்தாரிசொல் தரு.

முத்தம்தாருமென்றுபேசுராய் அடாபாவிதுரோகி
முடிசிதரியே மடியப்போகிறாய்

புலந்திரன்சொல் தரு,

மடியவல்லவே பாதர்க்கரசியே
யெந்தனபெண்ணே கண்ணே
மருகலைத்தனோ உரிமிலாதோராய்

கலந்தாரிசொல்வசனம.

கேளும்ராஜகுமாரகா நீர்யென் கணவனென்றும பிரட்டி பிரட்டினல் அதினல்வரும பலனுண்டோ நீயார்உன்பெயரென்ன தாய்தந்தை நாமதேயமென்ன யிந்தகோட்டைகருள்ளே வந்ததென்ன அதை விபரமாய் சொலலும ராஜனே;

புலந்திரன்சொல் கவி,

தந்தையோவிஜயபூபன் தாயாரோ அல்லியம்மாள்
யெந்தன்பேர்புலந்ரனென்பார்யின்றுன்னை சேராவிட்டால்
சந்தானமருபடிக்கிதானில்லையென்றுசொக்கர்
வந்துமேகினவிற்கூற மாதாவும அனுப்பினளே.

வசனம்.

கேளும் யென்பிராணநாயகி என்னுடையதந்தையோ விஜயகாண்டீபதிரன் என்தாயாரோ மதுராபுரி அல்லியென்பார்கள் யெனது பேரோ புலந்திரனென்பார்கள் யின்று சரிகிலேகிரகம் உச்சம்பெத்து நல்லசுபதினத்தில நானுன்னைச்சேர்ந்தால் பட்டத்துக்குயோக்கியமான சந்ததிபிரக்குமென்றும் யிதுதப்பினல் மருபடியும் சந்ததியில்லையென்றும் சொக்கநாதஸ்வாமி யென்தாயார்கினவில்வந்துசொல்ல யென்தாயார்சொற்படிவந்தேனடி பெண்ணேகலந்தாரியே.

கலந்தாரிக்கும்-புலந்திரனுக்கும்-தர்க்கம-தரு.

வாசமானயிந்தகோட்டைக்
வந்திடயுன்சொல்லை
வந்திடயுன்சொல்லைநம்புவேன்

கோசனை தூரமேசென்று
நமபுவேனகணவனென்று

புலந்திரன்சொல்-தரு

ஈசனை துதிக்கும்போது
யிககுவந்தவிதம்பாரடி
யிங்குவந்தவிதமபாரடி

யோசனை தூரமேசென்று
யென்பெண்ணேகண்ணே

கலந்தாரிசொல்-தரு

பொன்பதுமைவாய்சிரந்து
பூரித்துயுந்தனைசேருவேன்
பூரித்துயுந்தனைசேருவேன்

உன்கணவனென்றுசொன்னல்
கணவனென்று

புலந்திரன்சொல்-தரு

தென்மதுரைசொக்கர்பாகம்
சித்திரப்பதுமைபேசுதே
சித்திரப்பதுமைபேசுதே

யென்மனதிலெண்ணும்போது
கணவனென்று

கலந்தாரிசொல்-தரு

கட்டியபூராகூறிமணி கொட்டிஞல்கணவனென்று
கண்ணிஞல்காணுமேவன் பனங்களித்து
உனனுடனசேருமேவன்

புலந்திரன்சொல்-தரு

பிட்டுக்ககாகமண்சுமந்து தட்டணைகனைகயலைபோத
பூவையேமணியடிக்குதே பெண்ணேகண்ணே
பூவையேமணியடிக்குதே

கலந்தாரிசொல்-தரு

சொந்தமென்றுமாத்திக்கொண்ட அந்தகணையாழிதந்து
சுந்திரமாய்வந்துகூடுவாய் தடையில்லாமல்
சுந்திரமாய்வந்துகூடுவாய்

புலந்திரன்சொல்-தரு

அந்தகணையாழிமாதா தந்தபூஷணங்களெல்லாம்
அடையாளமாகதந்தனே யிதோபாரடி
அடையாளமாகதந்தனே

கலந்தாரிசொல்-கவி

மணமாலையுடனே அன்று மகிழ்சிபாய்மாத்திக்கொண்ட
கணையாழிதந்தபோதே கணவனென்றுறுதிகொண்டேன்
குணவானே அடியாள்செய்த குத்தமப்பொருக்கப்பாராய்
அணையாமல்யிருக்கொண்ணுது ஆசைநாயகனேவாராய்

வசனம,

அகோகேளும் பிராணநாயகா உலகவாழ்க்கைப்படி கல்யாணசபையில் மணமாலைசூட்டி கணையாழிமோதிரம உன்தாயாரளித்த பூஷணங்களும தந்தபோதே சந்தோஷமாகினேன் அடியாள்செய்த குற்றம்பொருத்தருளும்படி உமது திருவடிக்கு அனேகவந்தனம யினிபராமுகமாயிராமல் பஞ்சணைமீதிலவந்து சுகபோகத்துக்கெதுவைசெய்ய வாரும் யென்பிராணநாயகா.

புலந்திரனுக்கும்-கலந்தாரிக்கும்-தர்க்கம்-தரு

வாருமென்றுனன்பசொல்லே வஞ்சியேகொஞ்சவேண்டாம்
தாறுமாறாய்பேசநீயோ யென்கண்ணேபெண்ணே
போமேநடி தென்மதுரைக்கி

கலந்தாரிசொல் தரு.

மதுரைக்குநான்போறேனென்று மர்மம்வைத்துபேசலாமோ
பதருதெந்தனஉள்ளம்வாடிய யென்பிராணநாதா
மிதமில்லாத மைமயங்கினேன்

புலந்திரனசொல் தரு.

மையலானேனென்றுசொல்லி வழிமறிக்கவேண்டாம்போடி
தையலுன்னைபோலரியனே அடிபெண்ணேகண்ணே
மையுதெந்தன் மனதுவாடியே

கலந்தாரிசொல் தரு,

வாடியென்றழுத்தமிட்டு மருவிசுகம்கந்திடாமல்
மோடிசெய்யநீதியல்லவே யென்பிராணநாதா
கூடிவிளையாடுவோம் வாராய்

வேறு தரு.

வந்துகூடுமென்று யின்பசுகந்தருமுன்பு
விந்தைபேசிமனதறிந்து பேசலாகுமோ
விந்தைபஞ்சணையில் சிந்தைவைத்துயிதோவந்தேன்

கலந்தாரிசொல் தரு.

தண்டைகீதமாடயிதுவேளை கொண்டமையல்திரமெதுவாக
செண்டுஸ்தனத்தைபற்றிபதராமல் கட்டியின்பசுகந்தந்து
சண்டைசெய்யும்போதுமதன் விண்டுபோகவினையென்ன
பெண்டுக்கின்பமிருக்க கண்டணையவாருமஸ்வாமி (தண)

புலந்திரன்சொல் தரு.

மைபுலயீரிமெத்தகூடாமலே யிடாகவேவாடாமலே
தைய்யலுன்னைச்சேர செய்யவில்லைமனதில்
ஜோடாகவேதுய்யமஞ்சமீதுதையல் மன்மதன்கேளிசெய்யாமலே
காலடிகளைக்காமல் புதனைதந்தவண்டிவதனை
ஆடும்பரிசுதனைப்போலிருவர் கூடிப்பச்சைகிளிகள்போல
கொஞ்சிமைய்யல்மீரி மெத்தவாடாமலே (மை)

புலந்திரன்சொல் கவி.

பார்த்தவர்புகழுமபெண்ணே பஞ்சணைமீதிற்கூடி
ஆனலும்தணிந்தேனிப்போ அரைக்ஷணமிருக்கொணாது
காவலரிந்திடாமல் கதிரவனுதிக்குமுன்னே
பூவையேமதுரைச்சேர பிரியம்வைத்தனுப்புவாயே

வசனம்.

அகோகேளுமபிராணநாயகி நாமிருவரும் கலந்துயின்பசுகத்தை யனுபவித்துமனங்களித்தோம் யினியிங்கேயிருக்கக்கூடாதுகாவலாளிகளறியாமல் சூரியனுதிக்குமுன்னே நான் தென்மதுரை போகவேண்டும் சந்தோஷமாய் விடைகொடுத்தனுப்பும் யென்பிராணநாயகி.

கலந்தாரிசொல் தரு.

என்னமாய்பிரிந்திருப்பேன் யென்நற்குணதனே
என்னமாய்பிரிந்திருப்பேன்
மன்னவரயென்னை வந்து மாவிசுகித்திருந்து
பொன்னைப்போல்பிரகாசதிரா போய்வாரேனென்றுசொல்ல

புலந்திரன்சொல தரு,

கண்ணுரஞ்சிதமே நீசலங்கிதவிககவேண்டாம்
கண்ணரஞ்சிதமே
அன்னுடமவந்துவுன்னை அனையாமலிருப்பனோ
குண்ணுமல்நானிருக்க குத்தமல்லவேபெண்ணே (க)

கலந்தாரிசொல தரு.

இப்படிவாடவுமாச்சுதே யிந்தகதிகாலத்தில்
இப்படிவாடவுமாச்சுதே
கைப்பிடித்ததேலாவுமமை கண்டுகளித்திருக்க
கொப்பெனவேபோரேனென்று கூரவுமனம்வந்துதோ

புலந்திரன்சொல் தரு.

இந்திரன் சுந்ததிதுவோ சத்தமேகப்புரவியாகும்
இந்திரன் தந்ததிதுவோ
அந்திரமார்கப்போக அதன்மிலயிருக்கவும்
வாதுவுந்தனைக்காண மயங்கிதவிப்பனோ (இந்)

கலந்தாரிசொல் வசனம்.

ஆனால்யெனக்கு சந்தேகமில்லை அப்படியே நாள்தோரும் வந்து யெனகு சுகமபாலித்து காப்பாத்துவது மெய்யானல் சந்தோஷமாய் போய்வாரும் யென்பிராணநாயகா.

புலந்திரன்சொல் கவி.

கண்ணுணமனவிமிக்க களிப்புடன்விடையளிக்க
குண்ணுமல்புரவியேரி கொத்தவன்வீடுசேர்ந்து
அண்ணுடமவந்துபோக அதினலேஜந்துமாதம
பெண்ணுருமகெர்ப்பமாக பெருமையாய்கர்ணன்வாரான்.

வசனம்.

இப்படி மனைவியிடம் விடைபெற்றுக்கொண்டு சத்தமேகபுரவியின்மேலேரி மதுரயைச்சேர்ந்திருக்க தாயாருக்குஅங்கு நடந்தசேதியைக்கூரி நாள்தோருப வந்து கலந்தாரியைபுலந்திரன கலந்துபோகஅதினலேஜந்துமாதமகெர்ப்ப மாகினள் அப்போது சலந்தாரியை காவல்காரக் கர்ணராஜன் வருகிறதிதங்காண்க.

கர்ணன்சொல் கவி.

நெடிமுடியலங்கரித்து நிகரிலாவத்தனதிரன்
கொடியுடன்விருதுபூண்டு குமரவேமுரசபேரி;
வடியுடன்கோட்டைக்குள்ளே வருந்திபேகலந்தாரிக்கு
கடிகியேகாவலான கர்ணனும்வருகின்றானே.

கர்ணன்வருகிறதரு.

| | |
|---|---|
| காசிபோர் துதிக்கும் | கதிரவன்மைந்தனை |
| கர்ண்ணமகாராஜன்வந்தான் | வெகுநய நுணசீலன் |
| கர்ண்ணமகாராஜன்வந்தான் | |
| தேசதேசமன்னவர்கள் | வாசவனும தாஸ மகிழ |
| செவனைகயிற்கடகமின்ன | அங்கமும்பளபளென்ன (சரு) |
| சிரப்பாகவீரிய | னென்றுகொண்டாட |
| அர்ப்புதமாகிய | பொற்பணியாட (கா) |
| தண்டைவெண்டையங்காலில் | மண்டியேகலகலென்ன |
| குண்டுகடகம்பூண்டு | வாகுமபளபளென்ன (சரு) |
| சூடியமணிமுடி | சூரியனென்னவே |
| ஆரமும்கதிரொளி | மீசியதுன்னவே (காசி) |
| ஈட்டிவல்லயம்பாலா | நீட்டியதனுவுதண்டம் |
| காட்டியதிகவீரம் | பேட்டிகாவலர்சூழ (சரு) |
| காதினிர்க்குண்டலம் | மாமணியாட |
| சோதிகவுரியும | மாதர்கள்போட (காசி) |
| இந்தகோட்டைக்குள்ளாக | வந்தகன்னியைக்கண்டு |
| கந்தகட்டளைப்படி | விந்தைகாவலர்சூழ (சரு) |
| தண்டனைசெய்பவும | தப்பிதங்கண்டு |
| அண்டியேபார்கவும் | மின்பமும்கொண்டு (காசி) |

கர்ண்ணராஜன்சொல் வசனம.

அரசாகேளுங்களடி தாதிமார்களே நாமானல் காசிப்பட்டணம சென்று விஸ்வநாதரையும விசாலாக்ஷியம்மனையும தெரிசித்து அங்கு இலங்காளிருந்து வருமபோது வழியிலொருதடாகமிருந்தது அந்தத[illegible]கக்கரையில் யிரங்கியிருக்கிறபோது அவ்வழியாக மதுராபுரி பட்டணம சென்று அங்கே யிருந்தவர்களை புலந்திமகாராஜன் விர்த்தாந்திரங்களைகேட்டேன் அதைகலந்தாரியிடம சொல்லவேணும் ஆகையால் அதிசீக்கிரத்தில் கலந்தாரியை அழைத்து வாருங்களடி தாதிமார்களே.

பொது கவி.

கன்னியேயெனது காலுக்குச்சரணம் செய்தவ்
[illegible]ன்னமோவிதங்கள்தானும யெனக்கொன்றுமதோன்றவில்லை

துன்னவே தூண்மருங்கின்று சோபமா யிருப்பதென்னை
மன்னிய தாதிமாரே மகிழ்வியா யறிந்துவாராய்.

வசனம்.

கேளுங்களடி தாதிமார்களே நான்யிவ்விடமவந்தால் யெதிர்கொண்டுகலந்தாரியம்மன் யென்மடிமீதில விளையாடிகொண்டி யிருக்கின்றதாச்சே யிப்பவும்நாணங்கொண்டு தூண்மரவாக கிரக்கவேணடியதென்ன அதைதெரியச்சொலலும் தாதிமார்களே.

கர்ணன்சொல் கவி.

கன்னியே தாதிமாரே கலந்தாரிதன்னைப்பார்த்தால்
மின்னியமுகம்வெளுத்து மேனியும்பளபளென்ன
துன்னியவுருவமாரி துலங்குதுகெர்ப்பஜாடை
யென்னமோவிபரீதங்கள் யெனக்கதையறிவிப்பாயே.

வசனம்.

அகோகேளுங்களடி தாதிமார்களே நான்காசியாத்திரைசென்றுவந்திருக்க அதோதூண்மரவாய் நாணங்கொண்டிருக்குங்கலந்தாரியைப்பார்த்தால் முகம்வெளுத்து சரீரம்பூரித்து பளபளப்பாகவும் வருவமாரி கெர்ப்பகுறிகாணப்படுகிறது அதை அறிந்துச்சொல்லுங்களடி தாதிமார்களே.

தாதிகள்சொல் வசனம்.

அதற்கென்ன சந்தேகமிருக்கின்றது கலந்தாரிக்கு ஐந்துமாதம் கெர்ப்பந்தான் மகாராஜனே.

கர்ணன்சொல தரு.

| | |
|---|---|
| கெர்ப்பம்வந்தவகையேதடி | காவலானகோட்டைக்குள்ளே |
| அற்பமாகயெணணிவந்த | அச்சமற்றகளளனாடி (கெ) |
| புத்திமானென்றெண்ணிவந்தனே | உந்தனைக்கண்டு |
| மெத்தமனம் | வாடினேந்தனே |
| சத்தியதுணையென்றெண்ணி | தங்கமேயென்முன்னேநின்று |
| சுத்தமுள்ளமாதரசே | சூலிநீபொய்சொல்லொணாது (கெ) |
| கோட்டைக்கதவெல்லாந்திறக்க | ஒட்டாமல்நாளும் |
| காட்டியமுத்திரை | யிருக்க |
| சூட்டியபணிதுலங்கும் | சுந்திரமேயென்னிடத்தில் |
| காட்டிலீலைசெய்யவந்த | கள்ளனோவிள்ளச்சொல்லும (கெ) |
| மன்னர்மண்டலீகர்களெங்க | துரியன்பேரை |
| சொன்னபோதே | தேவர்களெங்க |

அன்னமேயுலகமெங்கும் ஆணைடுகொடிபெத்திருக்க
வர்ண்ணவீரர்கோடிசூழ வந்துகாவல்காணிருக்க (செ)

கர்ணன்சொல் கவி.

கலந்தவன் தன்னைக்கேட்டால் கன்னியும்பதில்சொல்லாமல்
குலந்தனையழைக்கவந்தாய் கூச்சமோவெனக்குசொல்ல
நலமதாயறியவேண்டி நங்கையென் தங்கையான
துலங்கும்துர்ச்சடையாள்தன்னை சுருக்கினிலழைத்துவாராய்.

வசனம்.

கேளுமதாதிமார்களே யிவ்விடமவந்தநாயகனைக்கேட்டால்யென்னுடன்சொல்ல அச்சமாயிருக்குறாள் யிதைதசடுதியில் கண்டுரைக்கும்படியென் தங்கையான துர்சசடையை அழைத்துவாருங்களடி தாதிமார்களே.

துர்சசடைசொல் கவி.

கர்ணனுமழைத்தசேதி கண்டுதாதிகளுரைகக
வர்ண்ணமாய்பணிகளெல்லாம வகையுடனலங்கரித்து
உன்னிதகொலுசுதண்டை ஓசையாய்கலகலென்ன
துன்னியவதனரூபி துர்ச்சடைவருகின்றாளே.



துர்ச்சடைவருகிர தரு.

அன்னம்போல்நடைநடந்து அழகுள்ளபணிகளமின்ன
துன்னியவதனமுள்ள துர்ச்சடைவந்தாள்
தங்கயொட்டியாணமின்ன சரிகைசேலைபிலங்க
செங்கையிற்கடகமின்ன சேயிழைவந்தாள்
பாடகமபீலிகொலுசு பாதகண்டைகீதம்பாட
தேடியகர்ணன்முன்னே செல்வியும்வந்தாள்
சந்திரமுகப்விளங்க சாந்துசவ்வாதுவீச
சந்திரவதனமுள்ள துர்ச்சடைவந்தாள்

துர்ச்சடைசொல் கந்தார்த்தம்.

அண்ணாசருணம் அதிபெலதீரா
மண்ணாளவந்த மஹிபாசருணம்
கண்ணாகவுந்தன் கயனபொற்பாதம்
அண்ணாவுந்தன்.

துர்ச்சடைசொல் தரு.

மலரடிசருணம — அண்ணாவுந்தன்
மலரடிசருணம
இலகுமுடிவதனா — மிக்கசபையிலென்னை
அலர்முகம்வாடியே — அழைத்தவிதங்களென்ன (மல)

கர்ணன்சொல கந்தார்த்தம்.

பொன்னானதங்கையே பூவையேவாழி
மின்னாடிசுத்த மேகங்கள்போல
உன்னாலேவந்த வொளிபெற்றகன்னி
அன்யாயமாக,

கர்ணன்சொல் தரு.

ஆகினளம்மாள் — மகனைப்கெர்ப்ப
மாகினளம்மாள்
கோகிலகலந்தாரி — குலத்தைகெடுக்கவந்தாள்
ஆகிலும்விபரங்கள் — அறிந்துக்கூறும்மமா (ஆ)

துர்ச்சடைசொல் வசனம்,

அப்படியே அறிந்துவருகிறேனென்று மகளைத்தனிமையாயழைக்து துர்ச்சடைகலந்தாரியை கேழ்க்கிறவிதங்காண்க,

துர்ச்சடைசொல் தரு.

மகளேநீவாடி. — மன்னனைத்தேடி.
மாராயழியவைத்தாய் — சேதியனுனென்னசெய்வேன் (சரு)
வாசமாகிய — நேசனாடி
கூடிடாமலே — பேசும்பேசாய் (மக)

கலந்தாரிசொல் தரு,

கூசியேநாடி. — வீசாதேபோடி
குற்றமானென்னசெய்தேன் — குலமாதேயம்மா (சரு)
கோதைநீயுமே — வாதையாகவே
பேதமேதடி. — சேதமாகவே (கூ)

துர்ச்சடைசொல் தரு,

பதட்டமாய்மீறி — பசப்புகள்கூறி
பதிக்கிப்பேசாதேவாடி — குலகாரி (சரு)

பாருமுந்தனே சேரவந்தவள்
ஊருமபேரையும கூறும்கூரடி (பத)

சலந்தாரிசொல் தரு,

என்குணமரிந்து யென்விருதெரிந்து
யிடக்குப்பேசாதேபோடி யென்தாயே (கரு)
யெத்தியேவேரொரு உத்தமமன்னனே
நத்தியேநானுமே குத்தமுய்செய்வனோ(என்)

துர்ச்சடைசொல் தரு.

காலைதாண்டி பாவையேவேண்டி
கலந்தகள்ளனோடி ஒளியாதேசொல்லும (கரு)
கத்தவித்தயே மெத்தப்பேசுராய்
தத்தமல்லவோ உற்றதென்னடி (கா)

கலந்தாரிசொல் தரு,

கணவனும்வந்து கலந்தின்பந்தந்து
கட்டித்தழுவி முத்தமிட்டாரே (கரு)
கள்ளனல்லவே உள்ளதிப்படி
விள்ளவேசொன்னேன் வள்ளல்சாக்ஷியாய் (க)

துர்ச்சடைசொல் தரு,

இப்படிநல்ல யின்பமும்சொல்ல
யெடுக்குமோயுலகுக்கு கலமாக (கரு)
யிந்தகோட்டைக்குள சொந்தநாயகன்
வந்துயுனக்குமே தந்ததென்னடி (இப்)

கலந்தாரிசொல் தரு,

மாத்திரையாழி மாமியாபரணம
வாங்கிவைத்திருக்கிறேன் யிதோபாரும(கரு)
வாட்டமற்றுமே காட்டிகூரடி
நாட்டமானவர் மேட்டிகாணவே (மா)

துர்சசடைசொல் கவி,

கண்ணேயென்மணியேபெண்ணே கர்ப்புளளஅரிவுயென்மை
வண்ணமாமயிலேமெத்த மனமதுமகிழ்ச்சிகொண்டேன்
யென்னன்னன்யுங்கன்மீது அதிகமாய்வருத்தமகொண்டார்
நண்ணுக அடையாளத்தைநான்காட்டிவாரேனயமா,

வசனம்,

கேளும் யென்னருமைமசெல்வமே உன்னரிவிர்க்கும் மேன்மைக்குப் மெத்தவுக்களிப்படைந்தேன் யிதுசக்கதியரியாமல் யென்னன்னன்வுன்மீதில் மெத்தவுமவருத்தப்படுகுரார் நீகொடுத்த அடையாளஙகளை கொண்டுபோய் காண்பித்து சமாதானம்சொல்லி வருகிரேனமமாயென்னருமை செல்வமே,

துர்ச்சடை கர்ணனுக்கு சொல்லும் கவி,

அன்னவே கணவன் கூடி அளித்தயாபரணமெல்லாம
நண்ணுக அளித்தாளிந்த நலமதையறிந்துவந்தேன்;
பெண்ணுளின்பேரில் பேதமையொன்றுகாணேமை
மண்ணுளுமவேந்தேயுங்கள் மனமதுயிதங்குவீர்.

வசனம்.

அண்ணகர்ண்ணபூபனே நான்தீரவிசாரிக்கும்போது தன்கணவன்வந்து கலந்ததாகவும அவரிடத்தில அடையாளம வாங்கினகணையாழியும் மாமியார்தாலிப்பதக்கமும் பூஷணுதிகளும தாங்கள்யிதைப்பாரும்யென்னண்ணவே

கர்ணன்சொல் தரு.

உத்ததரிக்கேனம்மான் உந்தன் தமையனுக்கு
யெத்தனைசொன்னலும் குலைசெய்யத்துணிவான்

துர்ச்சடைசொல் தரு.

செய்யத்துணிவானென்று செப்புந்தமையனுக்கு
தையல்கிரையிருக்க தர்மமோயுமக்கிது

கர்ணன்சொல் தரு.

தர்ம்மமல்லவென்று சாற்றினென்வெகுபுத்தி
வர்மமைத்திவனிடம மதிக்கெதிருண்டோசொல்லும

துர்ச்சடைசொல் தரு

எதிரில்லையென்றுமே யிடக்குகவ்செய்தாலே
சதிவந்துநேர்ந்திடும் தப்பாதுநான்சொன்னேன்

பொதுவசனம்.

இப்படியாககர்ண்ணராஜன் சொலலி வருமபோது துரியோதனன்கொலுவுக்கு வருகிறவிதங்காண்க,

துரியன்வருகிற கவி.

வேதியர்வேதம்பாட விருதுகட்டியங்கள்கூற
ஜாதிமாமலர்கள்வீச சல்லரிமுரசுபாட
கோதிலாஜகுனிமாயன் குலாவியேபடைநெருக்க
சோதிமாமகுடமின்ன துரியனும்வருகின்றனே.

துரியன்வருகிற கவி.

திங்கள்குலதுங்கனுன தீரமுள்ளவீரசூரன்
மங்களமாதர்களாடவே துரியோதனன்
மன்னனவந்து கொலுவாகினன்
ரத்தினமணிமகுடமின்ன ராஜாராஜர்வந்துசூழ
சித்திரப்பணிகளாடவே துரியோதிரன

தீரன்வந்துகொலு வாகினன்
ஜல்லியன்ஜகுனிமாமன் தம்பிமார்கள்புடை சூழ
மெலலியர்நடனமாடவே துரியோதிரன்
வேந்தன்வந்து கொலுவாகினன்
முரசுடக்காபேரிகையும் முத்துநாகசுரம்பாட
வரிசையாகசேனைசூழவே துரியோதிரன்
மகிகூஷியுடன் கொலுவாகினன்

துரியோதனன்சொல் கவி.

தம்பியேஜகுனிமாமா சல்லியபதியேகேளாய்
அபபுவிமன்னரெல்லாம் அடங்கியேகப்பங்கட்டி
யின்பமாய்வாரசேதி யின்னகருலகமெல்லாம
சம்பிரமாயிருப்பதுணடோ சங்கதியரிவிப்பீரோ.

வசனம்.

கேளும்ஜகுனிமாமா தம்பிதுர்ச்சாதனு சல்லியபூபனே யிந்த அவனி அன்பத்தாருதேசமன்னவரும நமக்கடஙகிகப்பங்கட்டி வருகிறார்களா அதுவன்னியில் உலகத்தியந்தமும் சுபேக்ஷந்தானு சொல்லு மாமாவே அப்படியேயாதொன்றும் குரைவில்லாமல் நடந்துவருகிறது துரியோதனபூபனே.

பொது வசனம்.

இப்படி துரியோதனராஜன் கொலுவாகவிருக்க அப்பொழுதுகர்ண்ணராஜன் துரியோதனனுக்கு கலந்தாரியின்சஙகதிசொல்லுகிரவிதங்காண்க,

கர்ணன்சொல் கவி.

மாசிலா துரியபூபன் மன்னனேசொல்லக்கேளாய்
காசிமாநகரம்சென்று கடிகிநான்வந்துபார்க்க
வீசியகோட்டைக்குள்ளே மெல்லியுக்கெர்ப்பமாகி
கூசியேயிருந்தாளப்பா குலப்பழுதாகிதே.

வசனம்.

கேளும்தம்பி துரியோதனு நான்காசிப்பட்டணம சென்றுவந்து மூன்றுதினமாச்சுது கோட்டைக்குள் வைத்த கலந்தாரியை அவள்புருஷன்வந்தி மருவினதால் ஐந்துமாதம கெர்ப்பமாயிருக்கக்கண்டு வந்தேனப்பா துரியபூபனே.

துரியோதிரன்சொல் கவி.

இப்படியாய்கர்ண்ணனுமே கூரக்கேட்டு
யிருவிழிகள்பொரிபரக்க உகட்டைக்கவவி

தப்பிதங்கள்வந்ததென்று சினமிகுத்து
தணலிலிடுமெழுகதுபோ லுரிகிநெஞ்சம
செப்பெரியகன்னியரும் கெர்ப்பமாக
செய்ததொருவிரிபனை சொல்லேவனென்று
பொப்பியுனைகாவல்வைத்தேன் சர்ண்ணுறவென்று
இசைபிடிபோல்துரியன் யுரைக்கின்றானே.

### துரியன்சொல் தரு சிந்து.

| | |
|---|---|
| கன்னிகலங்காரியாள | கோட்டைக்கு |
| காவல்வைத்தேனுன்னை | ஆவலுடனே |
| உன்னதகோட்டைகதுள்ளே | சோரமசெய்ய |
| உச்சிதமாய்வந்தவனு | ரிச்சைபெரிகி |
| பாலுக்குகாவலிருந்து | நீயும |
| பக்ஷமுடன்பூனைக்கு | யிஷ்டம்பெரிகி |
| மேலுக்குபேசவந்தாய்நீ | உன்னாலே |
| மெத்தயெந்தனகுலத்துக்கு | குத்தமவந்துதே |
| நீர்கார்கருப்கோட்டையிலே | அச்சமற்று |
| நேசமுற்றுவந்தவனை | கூசமற்றுமே |
| சிரைகார்க்கயுன்னைவிடுக்க | யெந்தனுக்கு |
| செப்பவந்திர்மெள்ளமெள்ள | தப்பிதங்கண்டு |
| காவல்தப்பிவந்தவனை | நீயுமே |
| கண்டுபிடித்திங்கேநீயும் | கொண்டுவராமல் |
| கோபமெத்தக்கொள்ளாதே | சொல்லேனென்று |
| குற்றமெல்லாமயுன்மீதில் | வைத்துசுமந்தாய் (தரு) |

### துரியோதனன்சொல் கவி.

சத்தியவானென்றுன்னை காவல்வைத்தேன்
  சதிசெய்பநீதுணிந்து குலம்கெடுத்தாய்
யெத்திசையும்யெந்தனை நிந்திக்கவைத்தாய்
  யெதிராளியேளிதக்கள் செய்யவைத்தாய்
பத்தியுடன்காவலுமயிருக்கக்கோடி
  பக்ஷமவைத்துகள்ளனைநீ யுள்ளேவிட்டாய்
உத்தமனுயென்னெனதிரில பேசவந்தாய்
  உன்னாலேயிருந்துயா மடைந்திட்டேனே.

### வசனம்.

கேளுமகர்ணனை மகாராஜனே சத்தியவானென்று யுன்னைநம்பி காவல்வைக்க யெனக்குசதிசாப்பனை செய்யததுணிந்து யென்குலத்

னைக்கெடுத்து யிந்தலோகத்தாரெல்லாம நகைக்கச்செய்தாய யெதிராளியான பாண்டவாள்யேளிதம் செய்யும்படி செய்தாய் ஒருவருபோகாதகோட்டைக்குள்ளே போகும்படி கள்ளனுக்கு பந்தம்பிடித்துபெண்ணையாருக்கோ படியவைத்து உத்தமனாக பேசவந்தாய் உன்னாலே ஆராத்துயர மடையலானேன் யென்னெதிரில்நில்லாதே அப்புரமநடவும் கர்ணணராஜனே.

கர்ணன்சொல் தரு.

சிவசிவாயிந்த தீவினைக்கெஸனுசெய்வேன் (சரு)
தேவதேவனே பாவநாசனே
திரிபுரதகனா பரமனேயென்
பாபமோயிது கோபங்கொண்டுமே
பங்கமுமைக்கவும் சங்கையானனே (சிவ)

துரியோதனன்சொல் தரு.

அன்றுகர்ணனுகீர்த்திபெற்றாயே யிப்போ
அன்யாயமாய் பங்கம்வைத்தாயே
உன்னைவன்வீட்டினில் வணக்கமில்லாபல
நன்றிமரந்தவனே நின்றுபதில்சொல்லாதே (அன்)

கர்ணன்சொல் தரு.

அரிகரியிந்த ஆபத்துக்கென்செய்வேன்
அய்யோபிதர்ககுநாளை செய்வதெப்படி (கரு)
அதிரவேவுடல் பதருதேபனம
வைய்யமுண்டவா பொய்யுமெய்யுமே
மகிழ்ந்தரியாமல் புகழ்ந்துபேசுரான் (அரி)

துரியோதிரன்சொல் தரு.

சொன்னேனென்று கோபமகொள்ளாதே-அன்று
சோரமசெய்தவனை சூதுவில்லாதே
ள்ளிகோட்டைக்குள்ளே உன்னையரியாமல்
யென்னமாய்வழிகண்டு யெவர்போவாருலகத்தில (சொ)

கர்ணன்சொல கவி.

குரிகுரான்பழியென்மீது குவலயமெல்லாமசொல்லும
நரிக்-பகீர்த்திகாக நற்கீர்த்தியெடுத்தாப்போலும
கரிக்கொருக்ரநாதா காணுதபழிசுமந்தேன்
திருக்குகளபேசினாலும் தெய்வந்தானறிந்திடாதேச.

வசனம்.

அய்யய்யோதெய்வமே தூரியபூபன்பென்மீது பழிவைப்பதுயெப்படியிருக்கிறதென்றால் காமகீர்த்தியும நரிஅபகீர்த்தியும் யெடுத்தனு

போலும் காணாதவீண்பழிசுமந்தேன் யிதுயாருக்கும்தெரியாவிட்டால் தெய்வத்துக்குதெரியாதோ நானென்னசெய்வேன், கர்த்தனே.

பொது வசனம்,

இப்படி துரியராஜன் கர்ண்ணனைகடிந்துபேசும் சங்கதிபட்டணமெங்கும்பரவிகேழ்க்க தாதிகளோடி பெருந்திருவானைக்குச் சொல்ல அச்சேதியரிந்து பெருந்திருவானை புருஷனைகாண்கிர விதங்காண்க.

பெருந்திருவானைவருகிர கவி.

அருந்ததிபதிவிரதை அகலியின்ராணிமெச்ச
நருந்திகழ்பணிகளமின்ன நங்கைகள்கவரிவீச
வருந்தியராஜனுள்ள மனத்துயராத்தயிந்த
பெருந்திருவானைமாது பிரியமாய்வருகின்றாளே.



பெருந்திருவாள்வருகிற தரு.

பேடைத்திருநடன ஜாடைசந்திரவதி
பெருந்திருவானைவந்தாள் துரியனைக்காண
பெருந்திருவானைவந்தாள (பே)
வாடைகளபமவீச மன்னவர்துதிபேச (சரு)
வர்ண்ணபூஷண மின்னியமாமணி
சன்னல்பின்னலாய் துன்னியாடவே (பே)
முத்துகட்டிகள்துன்ன ரத்தினபதக்கமின்ன
முல்லைநகைதுலங்கவே பெரும்சோலைமாமலர்
முல்லைநகைதுலங்கவே
வெத்திமாதர்களாட பத்திவரிபோட (சரு)

| | |
|---|---|
| மேகசிரமணி | யோகம்பெருகிய |
| நாகரிகவை | போகமாகவே (பே) |
| சரிகைசேலைபிலங்க | பெருகுமபணிதுலங்க |
| தரணியரசிவந்தாள் | வெகுவேடிக்கையாக |
| தரணியரசிவந்தாள் | |
| பரிசையுடனேவந்து | அரசரடிவணங்க (சரு) |
| பாலகிரணமும் | மேலுமழகிய |
| சோலைகிளிமொழி | மாலைசூடியே (சரி) |
| தண்டைகொலுசுபாட | கொண்டைகுப்பிகளாட |
| தையல்சிகாமணிவந்தாள் | சபைமுன்பாக |
| தையல்சிகாமணிவந்தாள் | |
| அண்டியாசனகோபம | கண்டுநாயகமுரைக்க (சரு) |
| அங்கமழகிய | தங்கபூஷணி |
| பொங்கமாகிய | திங்கள்குலபதி (தண்) |

பெருந்திருவாள்சொல் கவி,

மதிகுலம்தழைக்கவந்த மன்னவாபாதம்போற்றி
கதிர்மணிகலந்தாரிக்கு காவல்வைத்தவர் தமக்கு
சதிசெய்தாரென்றுசொல்ல தருமமோயுந்தனுக்கு
அதிவிதமாகனன்றாய் அறிந்துரைசெய்குவாயே,

வசனம்,

சருணம்சருணம் யென்பிராணநாயகா கலந்தாரிக்கு காவலாகவி சாரித்துவந்தகர்ண்ணமகாராஜன் நமக்குசதிசெய்தாரென்று சொல்வது தருமமல்ல அதில் நேரிட்ட குற்றத்தை நன்றாயோசித்து அறியலாமகாராஜனே.

சூரியன்சொல் தரு.

| | |
|---|---|
| பெண்ணேயிதுவென்னநீதி | நீயும் |
| பேசவந்தாய்பதில் | சேதி |
| அண்ணுடைபபார்க்கின்ற | அந்தக்காவலை சபயி |
| கண்ணுளன்வந்தாலும | காட்டாமல்விடலாமோ (பெ) |

பெருந்திருவாள்சொல் தரு.

| | |
|---|---|
| ஆறுமணுகாதகோட்டை | மன்னு |
| அதைகணடுவந்தவன் | மேதட்டை |
| கூறுமவனைக்கண்டால் | கொல்லாமல்விடுவாரோ |
| சீரவிசாரியாமல் | சின்னயேசலாமோ (ஆ) |

துரியோதனன்சொல் தரு.

உலகமெல்லாம்கெடிபெற்றுவந்தேன் யிப்போ
உரைக்குமவசனத்தாலே னொந்தேன்
கலகமசெய்யவந்த கள்ளனைபிடிக்காமல்
குலப்பாவியெனக்குமே சூரனாமோசேதி(உல)

பெருந்திருவாள்சொல் தரு.

வஞ்சகமில்லா தமன்னா அவரை
வந்துபேசுவது மென்னா
சஞ்சலமில்லாமல் தமையன்மேல்பழிசொலல
நெஞ்சம்துணிவதென்னா நீதியாகுமோமன்னா (வஞ்)

துரியோதிரன்சொல் கவி.

அன்னமேசொல்லக்கேளாய் அந்தரவாசியென்று
சொர்ண்ணமேபுவியிலுள்ள சூரருமனுகொண்ணாத
வர்ண்ணமாபகோட்டைக்குள்ளே வந்தவனிந்தநாளாய்
யென்னமாயரிந்திடாம லிருப்பதூவரிகிலேனே.

வசனம்.

கேளுமபெண்ணே யென்பிராணநாயகி அந்தரவாசிகளான தேவர்கள்வந்தால்வரலாம் யிந்தபூமண்டலத்திலுண்டான சூராதிசூரர்களும்வழிகண்டுவராத கேட்டைக்குள்ளே யின்னுள்வரைக்கும் கலந்தாரியை நேசித்துவந்தகள்ளனை கண்டுபிடியாமல் யிருந்தவயண மென்ன அந்தவிபரத்தை அறிகிலேண்டி பெண்ணே.

துரியனுக்கும பெருந்திருவாளுக்கும தர்க்கம் தரு.

மாயவித்தைககாரனே அதரமாக
வீரியமான தீரனே
சாயத்தைஅரியாமல கல்லகுணவான்மீதில்
நாடியேவீண்பழி தேடிக்கொள்ளலாமோ (மா)

துரியன்சொல தரு.

யிந்தகாலமாககலந்தாரி யிஷ்டபோகமாக
சொந்தமாதமாக அவனைக்கண்டரியாமல்
அந்தபூபனாலே பங்கமடைந்தேன்போடி (யிந்)

பெருந்திருவாள்சொல்-தரு.

ராஜர்க்கோவே
பங்கம்வந்ததென்று
பதராமலேநின்று திருடனைப்பிடிக்காமல்
திங்கட்குலதீரா
தேசமரியச்செய்து மோசம்போகலாமோ (பங்)

துரியன்சொல்-தரு.

கெட்டிக்காரிவாடி கர்ண்ணனீனை-யெல்லாம
கேட்டுகீவாபோடி
அட்டியில்லாமலே அருமைபைநொடிக்குள்ளே
வெட்டிபெரியுரேன் மேதினில்போற்றிட (கெட்டி)

துரியன்சொல்-வசனம்.

கேளும்பிராணநாயகிநடந்த சங்கதியெல்லாம்கர்ண்ணராஜனேகேட்டுவாருமபெண்ணே யென்பிராணநாயகி.

பெருந்திருவாள்சொல்-தரு.

திங்கள்குல[illegible]ஜர்கோமே திருவடிக்கியான்சருணம் (கரு)
தேசுலாவியராஜசுந்தரி மோசமானதைபேசுமையனே (திங்)

கர்ணன்சொல்-தரு.

உலகெல்லாமாளவந்த உச்சிதமாயெந்தன்தாயே
உற்றகதவுகள்வைத்தமுத்திரை மெத்தகண்டனேயெத்தைகூறுவேன்

பெருந்திருவாள்சொல்-தரு.

வாசமாககள்ளனுமே வந்திருக்கயில்[illegible]ளாய் (கரு)
வாடைபெருகியஜாடைகாணவும கூடுமல்லவே[illegible]ரேனே ([illegible])

கர்ணன்சொல்-தரு.

காசிக்கேகிவந்தநாளாய் கண்டதில்லைஜாடையொன்றும் (கரு
கரியமாலையன்தெரியச்சொன்னனேகர்ம்ம[illegible]மன்னமோவர்மமரிகிலேன்

பெருந்திருவாள்சொல்-தரு.

கண்டுகேழ்க்கதெண்டமசெய்து கள்ளன்வந்தானென்று (கரு)
காட்டஆதியுப்ருட்டமாயியார் பூட்டுப்பூண்மவாட்டம்தந்திட ()

பெருந்திருவாள்சொல-தரு,

வாசமாககேட்டைக்குள்ளே வந்தவிதம்கேட்டதுண்டோ (கரு)
வல்லவீரனேமெல்லியாளுமே சொல்லேகண்டதுயில்லையில்லையே

கர்ணன்சொல்-தரு.

இந்திரனுமதந்தபரி யேரிவாரான்வீரனென்று (கரு)
யின்பம்கூடவேதெம்புகொண்டனே உமபர்காணவேசம்பிவந்தனே

பெருந்திருவாள்சொல-வசனம.

கேளுமய்யனே கலந்தாரிதந்த அடையாளத்தை தாருமென்று வாங்கிக்கொண்டுவந்து திரவ்சாரிகதுமாவில் கலந்தாரிககலைன் மே

12 0646

வேந்திரன்தந்தசத்தமேகப் புரவியிலேறி அந்தரமாகவந்து போரதென்றும் அதற்கு அடையாளமாக தன்கணையாழிஅல்லியரசிதந்த மாந்தளிப்பதக்கமும தன்கணவனிடத்தில் கணையாழி மோதிரமுமவாளிவைத்து காட்டியதும வாங்கிவந்தேன்பாரும் யென்பிராணநாயகா.

துரியன்சொல்-கவி

இதுயென்னநிஜந்தான்பெண்ணே யென்னிடஅண்ணுகேளும்
சொன்னதுகுற்றமென்று சிந்தையிலெண்ணவேண்டாம
சதுர்பெருமஜதுனிமாமா சபையிலுள்ளவரேகேளீர்
புதுமையரயொன்றுயிப்போ புகலவது அரிகுவீரே.

வசனம்,

இதுநிஜந்தானென்று அரிந்தேன் அண்ணு கர்ண்ணமகாராஜனே நான்கோபக்குரோதமாய் கூரியவார்த்தையை குத்தமென்றுபாராட்டாமல்பொருத்தருளவேணும கேளுமாமாசபையிலுள்ளபேர்களே நான்சொல்வதை கவனித்துகேளுங்கள் சபையோர்களே,

துரியன்சொல்-தரு.

கலந்தாரிசெய்தகுத்தம் கண்டேன்
குலத்தாழ்வுவந்ததென்று கோபமிகக்கொண்டேன்
நமமையலலாமதிபாத மாதையிப்போ
உண்மையாமெத்தசெய்வேன் நிதோவாதை
கெர்ப்பவதியென்றுயெண்ண போமோ-அவளை
யிப்பவேவதைசெய்யாமல் விட்டுவிடலாமோ
அக்கினியில்தள்ளிவிடவேணும் யித்த
திக்கிலெங்தன்விரியககள் அப்போவல்லவோகாணும்

துரியன்சொல்-கவி.

பெருமையாப்சபையிலுள்ள பேர்களேசொல்லக்கேளும்
ஒருமையாய்கணவனென்று உகந்தவள் தன்னையிப்போ
வெருமையாய்விடவெண்ணாது மெலவியர்தன்னைக்கொண்டு
அருமையாய்தீயிற்றள்ள அந்தணர்தன்னையழைப்பீர்

வசனம்.

கேளும்சபையோர்களே நமமையெல்லாம்மதித்துபாராட்டாமல் தன்கணவகாகவந்து நமக்குயீனமேநேரிடச்செய்தகலந்தாரியையிப்போ அக்கினிகுழியில்தள்ளிமடிக்கவேண்டும்விதிப்படிக்கு அக்கினிவளர்த்தவேண்டியதர்க்காகபிராமணுளை அழைத்துவாரும்காவலர்களே.

பொதுவசனம்.

அந்தசமயத்தில் பஞ்சாங்கம்சொல்லும்படிக்கி கிருஷணமூர்த்தி புரோகிதனுக வருகிறவிதங்காண்க.

பிராமணன்சொல் கவி.

சந்திரகுலத்துவேந்தன் தானுமேயழைத்தாரென்று
அந்தணர்வருகும்போது அதிலொருமறையோனாகி
கந்தமும்பரிமளிகக கலந்தாரிதவமீடேற
தந்திரகிருஷ்ணமூர்த்தி சபைநாடிவருகின்றுரே.

பிராமணன்வருகிர தரு,

அந்தணர்கள்சூழ்ந்திடவே — ஆதிமறையோனுகியே
சுந்திரமாய்கிருஷ்ணமூர்த்தி — வந்துமேவினார்
அருமையுள்ளகலந்தாரி — அக்கினியில்விழுந்திடாமல்
ஒருமையாககார்க்கவேண்டி — ஓடிவந்தாரே
வடமதுரை தன்னைவிட்டு — வஞ்சகதிரியன்முன்னே
திடமுடனே ஆதிகிருஷ்ண — தேவருமவந்தர்
பார்த்தவர்தோத்திரம்செய்ய — பாண்டுவரபரூபமென்ன
சாஸ்திரமறைமேயான்போல — தானிதோவந்தார்

துரியன்சொல் வசனம்.

சருணம்சருணம் வேதப்பிராமணரே யிந்தசிமமாசனத்தில்யெழுந்தருளுமய்யா சுவாமி,

பிராமணன்சொல் வசனம்.

சுகிசுகிபவா ஆசீர்வாதம்மகாராஜனே நம்மை யழைப்பித்தவிதம் யின்னதென்று தெரியச்சொலலும்மகாராஜனே.

துரியன்சொல் கவி.

பதனமாய்காவல்வைத்த பாவையென்தங்கைசெல்வி
வதனமாய்கணவன்தன்னை மருவியேகெர்ப்பமானுள்
அதனுலேமனதுவாடி அககினிகுழியிற்றள்ள
யிதனுலேதோஷமுண்டோ யெடுத்துரைசெய்குவீரே.

வசனம.

கேளுங்களபிராமணரே யென்தங்கை புத்திரியைகர்வகில்வைத்திருகக யெங்கள்யெண்ணம் யீடேறவொட்டாமல் சோமாகதனெனவனைக்கலந்து ஐந்துமாதம் கெர்ப்பமாயிருக்குறுள் அவளை அக்கினிப்

பிரவேசஞ்செய்து அதில்தன்னிலவளை ...மைதறிலே படியுமுண்டா
யெவ்வகையில்திரும அந்தநதிநிருச்சொல்லும்பிராமணரே.

பிராமணன்சொல் கவி.

மன்னவனேபட்டணத்து வடக்கேசென்று
வைகையண்டைகுழிவெட்டி தீயைமூட்டி
சொன்னபடி மருசோமவாரமட்டும்
சோங்காமல்அண்டமட்டும் யோகத்தீயும்
உன்னிதமாய்கினறெரிய தானதர்மம்
ஓயாமல்நீர்கொடுத்து தியிர்த்தன்ள
வர்ணனமணிபூஷணனே பாபமிலலே
மனமகிழ்ந்துயிந்தவிதம நடத்துவீரே

வசனம.

கேளுமமகாராஜனே பட்டணத்துக்குவடக்கே வைகையாற்றங்கரையில அக்கினிகுழியுண்டாக்கி சந்தனக் கட்டைமுதலான காஷ்டங்களும யின்றுமுதல் மருசோமவாரமவரைக்கும அண்டமளாவிதீசாங்காமல் யெரியவேண்டும யிந்தபதினெட்டுநாள் வரைக்குபஙகையோயாமல அன்னதானம் சொர்ண்ணதானம் கோதானம் பூதானம்வஸ்த்திரதானம கன்னிகாதானம் யிப்படி முப்பத்திரண்டுதானமுங்கொடுத்து நிரவேத்தினபிறகு அந்தபெண்ணை அககினிபிரவேசம செய்தால்உன் குலம்விர்த்தியாகும யிப்படிசெய்யாவிட்டால குலநாசமாகும துரியபூபனே.

துரியன்சொல் கவி,

அந்தணர்வார்த்தைபோல அப்படிதானேயின்று
செந்தணல்வளர்த்தவேண்டி செலவது சந்தேனிப்போ
வந்ததுசோமவாரம மங்கையையழைக்கவேண்டி
தந்திரமுள்ள துர்ச்சாதன னிங்கேவரச்செய்வாயே.

வசனம்.

கேளும் அந்தணரே அப்படி அக்கினிவளர்த்து விதிப்படிநடக்கவேண்டியபடியால் திரவியமளித்தேன் மேன்மையான தானங்கொடுத்துவருங்காலத்தில் மருசோமவாரம்வந்தபடியால் கலந்தாரியை அக்கினியிற்றள்ள கொண்டுவரும்படி யென்தம்பியான துர்ச்சாதனை அழைத்துவாருங்கள் காவலர்களே.

துர்ச்சாதனன்சொல் கவி,

இடையினிற்கச்சைகட்டி யிருண்ட மீசையைமுறுக்கி
கடைவிழிபொரிபறக்க காலருத்திரனைப்போல

டையுடன்சிலைவயிலேற்றி பலபணிபலங்கரித்து
தடைபடாபுலிபோலதுர்ச்சா தனனிங்கேவருகின்றனே.

துர்ச்சாதனன்வருகிர தரு.

வீரன் துர்ச்சாதனனுபவந்தனே — தேரினிலேறி
வீர துர்ச்சாதனனுமவந்தனே
வீர துர்ச்சாதனுப்வந்தான் — விண்டலத்தவர்கண்டுநடுங்கிட
ஆரகேயூரகடகக்ககண — மணிந்தபதக்கமுமதளதளென்னவே (வீ)
காலில்வண்டையங்கலகலவென்றிடவே — ஒலிமிகுத்திடும
கனத்தமாமணி — பளபளவென்றிடவே
வேலுமுப்புரிசூலம — தாங்கியே
வெடிமுழங்கிட — யிடிகள்போலவே
ஆலமுண்டரு... — காலனென்னவே
அதரிபதரி — தாண்டிதாண்டியே (வீர)
சித்திரககுடைதான்பிடித்திடவே — டிங்கிடென்றுமே
வெத்திமுரசுடன் — பேரியடித்திடவே
சுத்திபாவலர்வந்துபணிந்திட — சூரருமஞ்சிநடுங்கிட
வெத்தவீரியதீரனென்றிட — விருதுகொடிகளோங்கிபரந்திட (வீர)
கண்டசரங்களும்மார்பிலாடிடவே — யிருபுரமும
கன்னிமார்களும — கவரிவீசிடவே
வெண்டையங்களுமகீதம்பாடிட — மெல்லிமார்களுமநடனமாடிட
குண்டலங்களுமசெவியிலாடிட — குருதிசேனையும்பெருகிநாடிட (வீர)

வேறு தரு.

அண்ணாவுன்பாதபவந்தனம் — அரசர்க்கதிபனேயான்சருணம

துரியோதனன்சொல் தரு.

வாழிகன்றாய்வாழ்ந்திருப்பாய் — தம்பி
வையகமெல்லாம — கீர்த்திபெற்றிருப்பாய்

துர்ச்சாதனன்சொல் தரு

கூரியென்னையழைத்ததென்ன — சொல்லவா திருவுளம்பற்றுமய்யா

துரியன்சொல் கவி.

ஸ்ரீகலந்தாரிதன்னைநீயும் விந்தையாயழைத்தோடிவந்திடுவாய்.

துரியன்சொல் வசனம்.

வாரும்தம்பிதுர்ச்சாதனா யிந்தக்ஷணமபோய் கோட்டையிலிருக்கின்றகலந்தாரியை அழைத்துக்கொண்டுவாரும் தம்பிதுர்ச்சாதனா,

பொது வசனம்.

அப்படியே நல்லதென்று வரும்போது யிந்தசேதி தெரிந்துகலந்தாரிக்கு சொல்லும்படி விஸ்லகேது வருகிறவிதங்காண்க.

விருத்தம்.

அமரர்களும்முனிவர்களுமே அதிசயிக்க
ஆணிமுத்துகெம்புபல பணிகளைமின்ன
சண்டனுமேபயந்தொடுங்க வல்லதீரன்
தனுகெதைவாள் கேடயமுமகரத்திலேந்தி
தண்டையுடன்வெண்டயமும் கலகலென்ன
தந்தைமொழிதவராத புகழ்பெவீரன்
கண்டவர்கள் திடுக்கிடவே விஸ்வகேது
கலந்தாரிதனைக்காண வருகின்றானே.

விஸ்வகேது வருகிறதரு.

வீரஉக்ரதீரன்வந்தனனே
வீரஉக்ரதீரன்வந்தனனே
வீரஉக்ரதீரன்வந்தான்
ஆரகேயூரகடகக்கணம்
முத்துவர்ணகுடைபிடித்திடவே
முடிகிரீடவெகுகெடி
சுத்திலுங்காவலர்கள்தாண்டி
சிட்டிகொண்டையும்
கட்டும்பிள்ளையுடன்
தோகைமார்களுமே
துரியன்தம்பிளைபக்தான்
வீரமாகவே துள்ளிவந்துமே
வருகும்சேதியைமாது
மனதிலெண்ணியேவந்து
துரிதமாகவேபுரவி
துலங்குமகோட்டையைநாடி

விஸ்வகேது
வண்டையங்கள்மண்டிஜொலித்திட
அணிந்தபுயவணிமணிகள்துலங்கிட
உலகெங்குமே
மிகுத்திடவே
துரிதமாகவேகண்டுமிரண்டிட
தான்துலங்கிட
தொங்கலிலங்கிட
மணதாசலக்கிட (வீர)
விடுத்திட்டேவெகு
மானைதபிடித்திடவே
அரியவே
கூரவே
யேரியே
மீரவே(வீர)

பொது வசனம்.

இப்படியாக விஸ்வகேது கோட்டைக்குள் வரும்போது அந்த சேதியறியும்படி கலந்தாரியெதிர்கொண்டுவந்து சேதியை கேட்கிறவிதங்காண்க,

கலந்தாரிசொல் கவி,

மைத்துனர்வருகும்போது வஞ்சியுமலங்கரித்து
சித்திசிலம்புகொஞ்ச சேர்ந்தயொட்டியாணமின்ன
சித்தளம்வந்ததில்லை மீதுயென்னட்டுதுமையென்று
கைத்தளம்வளையல்மின்ன கலந்தாரிவருகின்றாளே.

கலந்தா... ால் தரு.

சந்திரகுலம்விளங்க
சற்குணகலந்தாரியும்
விந்தைவிஸ்வகேதுமுன்னே
வந்துமேவினாள்
சித்தடிசிலபடுகொஞ்ச
சேலைசரிகைபின்ன
பத்தியுள்ளகலந்தாரி
பாவையுமவந்தாள்
வர்ண்ணமணிபூஷணங்கள்
வளையல்கலகலென்ன
மின்னுமிடைமாதர்சூழ
மெல்லியும்வந்தாள்
நெத்தியில்சுட்டிதுலங்க
நீலவர்ண்ணபொட்டுமிட்டு
கொத்துசரபாலையாட
கோதையுமவந்தாள்

கலந்தாரிசொல் வசனம்.

சருணஞ்சருணம் மைத்துனு உனது திருமுகம்வாடி அவசரமாக யென்னே காரணமபடி வந்ததென்ன அதைதெரியச்சொலலும் மைத்துனு.

விஸ்வகேதுசொல் கவி.

இக்கொலாம்புகழவந்த சீருள்ளதாயேநீயும்
பொர்கவெகாடிஅல்லிமைந்தன் புலந்திரன்தன்னைச்சேர
அக்கினிதனிலேதள்ள அதிபெல்துரியன்தபபி
உக்ரமாய்பிடிக்கவாரான் உண்மையாயரிகுவாயே.

வசனம.

கேளுமம்மணி நீதுரியனைமதியாமல் உன்னுயகனைச் சேர்ந்ததினுலேஅதுகுற்றமென்று உன்னே அக்கினியிலே தள்ளிவிடும்படியாகதுரியோதினன் உன்னைபிடித்துவரும்படிக்கி துர்சசாதனனை அனுப்பினுர் உனக்குதெரிவிக்கும்படி வந்தேனம்மாகலந்தாரியே.

கலந்தாரிசொல் கவி,

சொன்னசொல்கேட்டுமாது சுருக்கிட்டுமெய்மறந்து
கன்னியுமூர்ச்சையாகி கலங்கியேகடுகடுக்கி
என்னநான்செய்வேனென்று யேங்கியேயலரிவீழ்ந்து
கன்னியாள்மூர்ச்சைதேரி கதரியேபுலப்புவாளே.

கலந்தாரிசொல் தரு,

இந்தவிதிக்குதானே
வந்துநான்பிரந்தன்பாவி
யிதர்க்கென்னசெய்வனேயோ
தெய்வமே
பாவிதுரியனென்னே
பாரசிரையில்வைதது
பாதவித்திடலாச்சே
தெய்வமே
கணவனுடன்சேர்ந்தால்
கண்டிப்பாய்குற்றமென்று
அனலிலேதள்ளலாமோ
தெய்வமே

விரு

எப்படி துணிவேனென்று
அப்பவேயுனைக்கொலை
செப்பியயுலகளித்த தெய்வ
தப்பிதம்வந்திடாது தயங்காமலிருந்திடாயே.

வசனம்.

கேளும்மதனியே நீமெத்தவும் வருத்தப்படவேண்டாம் ருத்தம றியாமல் அன்யாயமாக அரசன்கொல்லத் துணிந்த போதிலும வெவ் வுயிரையும் பாதுகார்த்துவராகின்றதெய்வமும்கொல்லத்துணியுமோ வுனக்கொருதப்பிதமும நேரிடாது சும்மாயிருமமாகலந்தாரியே.

கலந்தாரிசொல்-தரு.

தப்பிதங்கள்வந்திருக்க — மைத்துனரே
நானெப்படி துணிந்திருப்பேன் — மைத்துனரே

விஸ்வகேதுசொல்-தரு.

இருந்துசிவனைநினைக்கால் — யென்தாயே
யெவரும்துயரறியாதே — யென்தாயே

கலந்தாரிசொல-தரு.

உலகமெல்லாமநகைக்க — மைத்துனரே
உண்டுபண்ணினுனேதலையெழுத்து — மைத்துனரே

விஸ்வகேதுசொல்-தரு.

உன்னைநகைப்பதுண்டோ — யென்தாயே
சூரியன்டன்னைநகைப்பார் — யென்தாயே

பொதுவசனம்.

யிப்படிவிசனப்பட்டிருக்கும்போது துர்ச்சாதனன்வருகிறவிதங் காண்க

துர்ச்சாதனன்சொல்-தரு

அரசர்நடுங்கவே — புவிகளதிரக்காண்டியே
திருசாயமீறியே துர்ச்சாதனன் — துள்ளிநடந்தானே
கெடிமிகுத்திடவேயெட்டுதிக்கும் — கெஜங்கள்வீறிடவே
கொடியகலனைப்போல்துர்ச்சாதனன் — குதித்துவாரானே
மலைகளகுலுங்கிடவே — வீரகண்டாமணிகளாடிடவே
நிலைகுலைந்திடவேகலந்தாரிமுன்னே — நிருபன்வந்தானே
யீட்டிசக்கரமுமவளைதடி — யிருபபுதண்டமுடன்
யேட்டியாகவேதுர்ச்சாதனன் — வீரநடமாடந்தானே

துர்ச்சாதனரிசொல்-கவி.

அஞ்சாதவீரமுள்ள அரிவை சொல்லக்கேளாய்
கொஞ்சாதுப்கொஞ்சிநல்ல குலந்துக்குயீனமலைத்தாய்
மிஞ்சாதவஞ்சியுனை விரிய தமையனரும
நெஞ்சார அழைக்கச்சொன்னர் நீயிப்போவருகுவாயே.

வசனம்.

கேளும்கலந்தாரியே யெங்களைமதியாமல் கள்ளப்புருஷனுடனே கூடிமருவியெங்கள் குலதத்துக்குயீனமலைத்தாயல்லவா உன்னைபெரி தமையன் அழைத்துக்கொண்டுவரச்சொன்னர் வாரும்கலந்தாரியே

கலந்தாரிசொல்-தரு.

தமையநழைத்திடும்சேதிமன்ன தன்னுலேவந்திடுஞ்சேதி
நமனுமநடுங்கிட ராஜசெம்பீரனே
நங்கையரியச்சொல்லும் செங்கைவீரியனே (தமை)

துர்ச்சாதனன்சொல்-தரு.

சோரமசெய்தபடிநீயிபதில் சொல்லலாகுமோகுடிகேடி
நேரஞ்செய்தவனுன்னை நெருப்புக்கிரைகொடுக்க
நிருபனழைக்கவந்தேன் மறுமொழியுனக்குணடோ (சோ)

கலந்தாரிசொல்-தரு.

யென்னருக்கமசெய்தேன் மன்றுசொல்லும்
பிதுந்தியோ யெட்டகில்லும்
வன்னிக்கிரைகொடுக்க மகிழ்ந்தின்பம்கொள்ளாதே
மடியக்காலமோவந்து கொடியகானகில்வீழ (யென்)

துர்ச்சாதனன்சொல்-தரு.

அஞ்சாதகீபெரும்கள்ளி அதட்டிபேசவந்தாய்துள்ளி
மிஞ்சாதேயென்னுடி வீரியம்பேசாதே
விட்டுவிடுவேனுனன் தொட்டிழுக்காமலே (அஞ்

கலந்தாரிசொல-கவி,

தொட்டுநாவிழுப்பேனென்ற சொல்லிபகோபமிஞ்சி
மட்டியெள்ளளவில்லாத மதமபேசுமமாமாகேளாய்
தட்டுவாளெந்தன்மாமி தன்னையுமரிக்திடாமல
கெட்டுமேபோகவேண்டாம கீர்த்தியோடிருப்பீர்மாமா

வசனம்,

கேளும்மாமாவேயிந்தசேதியையெந்தன்மாமியாரரிந்தால் உங்களையெல்லாமதட்டிக்கொட்டியெமபுரம சேர்த்துவிடுவாள் அதையறி

யாமல் கெட்டுப்போகவேண்டாமயென்னை துன்பமசெய்யாமல்நல்லகீர்த்திபெத்திருங்கள்மாமாவே.

துர்சசாதனன்சொல-தரு

பாண்டியன்மகள்வீரம் பாரெங்குமதெரியாதோ
பார்த்துவருவாளென்று யெனக்கெனனதெரியாதோ
தீண்டியேயுந்தனை சிகைபிடித்திழுக்கவே
தீரமுண்டுவெகு வீரமபேசாமலே
நடந்துவாடிவாடிகொலுவுக்கு நடந்துவாடி (பாண்)

கலந்தாரிசொல்-தரு

என்னகுத்தமசெய்தேனென்று யெண்ணியேநீபேசுராய்
மன்னர்மன்னருக்கிந்த மதிகேடுமாகாது
மண்ணிலிருந்துபழி யெண்ணிதுடிக்காதே
போடாபடுபாவிஉஙகளுக்கென்ன போங்காலமோதுரோகி

துர்ச்சாதனன்சொல தரு.

போடாவாடாவென்று பிதற்றுறயென்னடி
பேசாதும்பேசியே விசுறுயென்னடி
கூசாதுமகூசாமல குலத்தைகெடுத்தநீயே
கோணுதயுனக்கிந்த நாணமேதுசுமமா
நடந்துவாடிவாடிகொலுவுக்கு நடந்துவாடி

கலந்தாரிசொல் தரு.

தீண்டியிழுப்பேனென்று தீரங்களபேசாதே
தெய்வத்துக்கஞ்சாமல் வாயாலபுழுக்காதே
தாண்டிதாண்டியிங்கே தலைதுள்ளிவிழுகாதே
தப்பிதமறியாமல் செப்புவதழகல்ல
போடாபடுபாவிஉங்களுக்கென்ன போங்காலமோதுரோகி

துர்ச்சாதனன்சொல் கவி,

சண்டியேசாமத்துரோகி சந்திரகுலத்தில்வந்து
அண்டியேகுலங்கெடுத்த அருமபாவிநீரமெண்ணி
கண்டிதம்பேசும்போது கடுங்கோபம்கொண்டுமீறி
மண்டியேயுன்னைவாட்டி மயிர்பிடித்திழுத்திட்டேனே,

வசனம்.

அடிசண்டாளிசாமத்துரோகி சந்திரகுலத்துக்கு யீனமவைத்து கண்டிதம்பேசவந்தாயல்லவா யெனக்காகுங்கோபமீறி உன்னைகண்டித்துமயிரைப்பிடித்து யிழுத்தேன்பாரடி கலந்தாரி,



கலந்தாரிசொல் கவி,

அய்யய்யோவில்வநாதா அரும்பாவியுயிர்பிடித்து
செய்யவும்மிந்த துன்பம் செந்தணல்தனிலேதள்ளி
தையலின்னுயிர்மடிக்க தாழ்வென்னசெய்தேன்பாவி
உய்யுவாரின்னமென்று ஒருவகையறிகிலேனே,

கலந்தாரிசொல் தரு.

அய்யய்யோநான்யென்னசெய்வேன் யிந்த
அபகீர்த்திக்கோநான பெண்பிறந்தேன்பாவி (அரு)
தையலுமைபாகா தயவுசெய்குவாய்
தாவியிழுக்கவே ஆவிபோகுதே அய்யய்யோ (அய்)

துர்ச்சாதனன்சொல் தரு.

அழுதாலுமுனைவிட்டுவிடுவேனோ அடி
ஆருக்குங்காண்பயப் படுவேனோ
பழுதுசெய்துகுல பங்கமுண்டாக்கியடி
செரிக்கயுன்னையொட்டி யடித்தேனேயிப்படி (அ)

கலந்தாரிசொல் தரு.

தேவனேயென்னைத்தீண்டி அடிக்கவும் நான்
திராதபாவம்செய்து பிறந்தனோ யிந்த
பாவிக்கிதக்கமுமில்லையோ யெண்ணி
பாராமல்மண்ணின்மே லிழுக்குறான் (தே)

துர்ச்சாதனன்சொல் தரு.

சத்திதுரோபதைக்கூந்தல்தொட்டனே அவளை
ராஜசபையறிய விட்டனே

யெத்திசையரியாகே

னெதிர்த்துப்பேசவந்தாய்

யென்குணமரிந்துநீ

பதைத்துன்னைவாட்டுவேன்

பொது வசனம்.

இப்படி கலந்தாரியை துர்ச்சாதனன் மயிரைப் பிடித்திழுப்பதை ப்பார்த்து விஸ்வகேது சொல்லுகிரவிதங் காண்க.

விஸ்வகேதுசொல்லுகிற கவி.

தந்தைபின்வந்த துர்ச்சாதனனே யுன்பாதம்போற்றி
மைந்தனென்றுசொல்வேன மனமலைத்துககேளுமையா
சொந்தநாயகனைச்சேர்ந்த தோகையைவதையேசெய்யும
நிந்தையுன்குலத்துக்கீனம் நீதியைவிடுவாருண்டோ.

வசனம்.

கேளுமசித்தப்பாராஜனே யிந்தகலந்தாரியானவள் சொந்தநாயகனைச்சேர்ந்ததால் யிதுநலமெனறுயெண்ணாமல் மயிரைப்பிடித்திழுக்கவும் கலந்தாரியவ்வையப்பட்டால் அதுகுலம நாசப்படுத்து மென்கிறதும மனுநீதியைவிட்டு உமதுகோபத்தையடக்கிவிடும சித்தப்பாராஜனே.

விஸவகேதுக்கும துர்ச்சாதனனுக்கும் தர்க்கம் தரு.

தெரிந்தவன்போலென்னை அடுத்துமேஅடா

சேதிதெரியாமல்நீதிபேசுராய்

விஸ்வகேது

அட.விஸ்வகேது (சே)

விஸ்வகேதுசொல் தரு.

நீதியில்லாதமன்னர்க்கு

நிலத்தில்மிருகத்தைப்போல்

யேதையாசாஸ்த்திரம

வன்மைதான்

துர்ச்சாதனன்சொல் தரு.

குலத்துவன்மையைக்கெடுத்தபாவியே

கூசசலாகுமோஉன்னை

அடாவிஸ்வகேது

வீசித்துணிக்கவே

விஸ்வகேதுசொல் தரு.

வீசித்துணிக்கவீரம்

வெத்திமதிவளமேயல்

பேசுமோர்ராஜவீரனே

குத்தமேதையாராஜதீரனே

துர்ச்சாதனன்சொல் வசனம்.

கேளுப்விஸ்வகேது யிந்தகலந்தாரியை கோட்டைகருள்வைத்து காவலடித்திருக்க அவள்கெர்ப்பம் தாங்கி உலகுக்கெல்லாமபழிப்பென்று யோசித்துப்பாராமல் பேசவந்தாய்உன்புத்தியையரிந்தேன அப்புரமபோடாப்பயலே விஸ்வகேது

விஸ்வகேதுசொல் கலி.

துரியனாகிளையமன்னா சுயபுத்தி அறிவுமேன்மை
நெறியில்லாமன்னருக்கு நீதிகள்சொலவாருண்டோ
சரியில்லாவீரங்கூறி தையலுமபரதவிக்க
பரிவில்லாநெஞ்சந்தன்னை பதரிடச்செய்குவேனே,

வசனம்.

சேனும்சித்தப்பராஜனே செங்கோலேர்திய மன்னருக்கு தனது சுயபுத்தி அறிவுமேன்மை நெறிமுறை தானதர்மமுமில்லாத மவுடிக்கு யென்னநீதியை யெடுத்துக்கூறினாலும் பலனுண்டாமோ ஆதலால்சவுரியங்களகூறி மாதாவானவள் பரதவிக்க சத்துயரிவிலாது உன்துநெஞ்சமானது பதரிவாடசெய்யத் துணிந்தேன் யெனதுசவுரியத்தையபாரும் ராஜனே.



கர்ச்சாதனன்சொல் தரு.

இரதவீரப்தாமெடுத்தேன் கூரவும்
மிகத்துடித்துமேபவில்லை யெடுத்தேன்
சக்ரமுகபாணமெடுத்தேன் உனதனைசகொல்ல
சரியல்லவென்றுயெண்ணி மனைபவிடுத்தேன
சிந்தைமிகக்கலங்கிடுமே சடுநடுங்கி
இடுக்கிடவேதேவர்மனம உக்ரமுடனே
சித்ரமணிபணிக எதிராவிழவேசெய்து
உக்ரமபெரிகிட்டேவே சித்தமபதரிடயாட (மிக்த)

விஸ்வகேதுசொல் தரு

மலைதனைசிலைவளைத்தேன் பிசனைப்போலே
இலேயகனை நகையிலே வில்லையெடுத்தேனே

அலைகடல்சுவரிடவே அக்கினியாணம்
மலைபோல்கவியவில்லை பூட்டிவிடுத்தேன்
பலமுள்ளவீரியனே உந்தனையிப்போ
பத்தவும்நத்தவும்தலை சுத்திவிடவேபாராய்
பாணங்கள்விட்டேன் நேராய்
வந்தனேகொல்லவும் மாராய்
வலுவுடையவீராதி வீரியனே (மலை)

துர்சசாதனன்சொலதரு.

யென்னடாநீபயலே வல்லவனென்று
யெடுத்துவிட்டாய்பாணம தடுத்துவிட்டேன்
யென்னிலையறியாமல் அமோகபாணம்
அடரவிட்டாய்பாணம் துடரவிட்டாய்
உன்னிதவீரியனே நீயுமிப்போ
ஓடிவோய்மணம் தேடிவோய்
உடலுமநடுநடுங்க இடமுள்ளசிரைபடவே
குடலும்சரிபடவே உடலும்கருகருத்து (யெ)

விஸ்வகேதுசொல் தரு.

அரிந்தேனேயுந்தன்வீரம் அடடாதுஷ்டா
அடித்திடவேமனம் துடித்திடவே
தெரிந்திடயுலகமெங்கும யென்னிடவீரம்
இடத்துடனேவந்து தடுத்துவிட்டேன்
சிரந்தனை துணித்திடவே கெருடபாணம்
தேரினேனேவந்து மீரினேனே
இரண்டபுஜஙகள்ரெண்டும் உருண்டுதுடித்திடவே
மிரணடபார்வையுடனே அரண்டுமிரண்டிடவே (அ)

துர்ச்சாதனன்சொல் கவி.

அப்பனேவிஸ்வகேதா அரிந்தனேயுந்தன்வீரம்
செப்பியதுரியன்சேதி தெரிந்துமேதடுக்கலாமோ
யிப்பவேநாமும்கூடி யேந்திழையாளைக்கொண்டு
ஒப்பியேதமையன்முன்னே உகந்துவிட்டறியலாமே.

வசனம்,

அப்பாவிஸ்வகேது உன்னிட சவுரியத்துக்கு ரொம்பவும்மெச்சிக்கொண்டேன் நமக்குள்ளே சண்டையென்ன யென்தமையன்குணம் அறிந்திருந்தும் தடுக்கலாமோ நாமிருவரும் சந்தோஷமாய் கலந்தாரியைராஜசபையில் கொண்டுபோய் விட்டபின்பு நடக்கும்அதிசயத்தை பார்க்கலாம்வீரும்குமாரகா அப்படியே நல்லதுதந்தையே.

துர்ச்சாதனன்சொல் தரு,

சருணம்சருண மன்னனே மனதின்படி கலந்தாரியை
அழைத்துக்கொண்டுவந்தேன் அண்ணனே

துரியோதனன்சொல் கவி.

ஜகுனிசல்லியனேயெந்தன் சபையிலுள்ளவீரகேளீர்
வெகுகீர்த்தியழிக்கவந்த மெல்லியையலங்கரித்து
ஜெகமெலாங்கண்டுவாட தீயிலேயாளைத்தள்ள
புகழ்பெரும்வைகைகாடு போகலாம்வாருங்களே,

வசனம்.

கேளும்மாமாஜகுனி சல்லியராஜனே "நமது குலத்தை அழிக்கவந்தகலந்தாரியை விதிப்படி யலங்கரித்து அக்கினியிற் றள்ளும்படி நாமெல்லோரும வடக்கே வைகையாத்துக்குப் போகலாம் வாருங்கள்சபையோர்களே அப்படியேபோகலாம துரியராஜனே,



துரியனுக்கும் கலந்தாரிக்கும தர்க்கம தரு,

தையலேவாடி வைகையைநாடி
தடையில்லாமல்போக விதுவேளை (தரு)
தெண்டனைநேரவே கொண்டுமேயுந்தனை
மண்டியேதீயினில் வின்றுமேதள்ள (தை)

கலந்தாரிசொல் தரு,

தெள்ளியமாமா கள்ளமிதாமோ
திக்கிலாதருக்குத்த மிதுதானோ (தரு)
சிந்தையிலெண்ணியே தந்திடுமாமொழி
உந்தனுக்கிப்படியே வந்திடும்பாவம் (தெ)

துரியோதனன்சொல் தரு,

சூதுகளாடி பாதகியேயடி
துயரமடையவேவைத்தாய் பாஞ்சாலி (சூது)
அடிக்கவுமிப்படியே மடிக்கவேவந்திட
முடிக்கியேகத்தை படிக்கவுமுண்டோ (சூ)

கலந்தாரிசொல் தரு.

சிந்தையுந்துடிக்க வெந்தனைமடிக்க
செய்தகுற்றங்களென்ன செப்புவாய் (சரு)
செல்வினையிப்படி கொல்லவினைந்திட
கல்லதோவெகுவிதம் அல்லலுண்டாகும் (சிந்)

பொது வசனம்,

இப்படியிருக்க மதுரைக்கரசியான அல்லியரசிதம் துகொலுவை நாடிவருகிற விதங்காண்க,

அல்லிவருகிற கவி,

செஞ்சுடர்மகுடமின்ன சிரமணிபணிகளதுன்ன
வஞ்சியர்கவரிவீச சிலைகளைதவாறுமேந்தி
குஞ்சரமதன்னிமேலேறி குவலயத்தரசாஞ்சி
ரஞ்சிதமதுரை அல்லி நாயகிவருகின்றாளே

அல்லிவருகிற தரு,

தென்மதுரைநாட்டரசி சீர்பெரும்பாண்டியன்செல்வி
நல்லமணதாய்சபையைநாடியே அல்லி அரசி
ரஞ்சிதமாய்வந்து மேவினாள்
ரத்தினமகுடமின்ன நற்பணியலங்கரித்து
சித்திரக்குடைகவிக்கவே அல்லி அரசி
சிறுடனேவந்து மேவினாள்
வீரிடும்பேரிகைடங்கா மிக்கவேகடையக்கஸ்தூரி
பேரிகைமுரசுபாடவே அல்லி அரசி
பெருமையுடன்வந்து மேவினாள்
கட்டாரிசிலைவாளேந்தி கதிர்மணிமகுடமின்ன
வெட்டுகிக்கும்தானைக்கலே அல்லி அரசி
வேந்திழைகொலுவ தானினாள்

அல்லிசொல் கவி,

மந்திரிபவளசேனை மதுரைமாநகரிலுள்ள
அந்தணர்குடிவிளங்க அவனிபுமதனைத்துமேவாக்க

வந்திடவெந்தகாளுநம வாழ்வுதந்தாளுகின்ற
விக்னைதயீருகக்ஷிபாதயி மெல்லியாளடியாள்போற்றி

வசனம்.

கேளுமமந்திரியாகிய பவளசேனையே யிந்தமதுராபுரி பட்டணத்
திலுள்ள பிரமகுலமுதலான நாலு வர்ணத்தாரும் மற்றஉலகத்தி
லுள்ள சீவராசிகளுமதமைதமீதாவகிவருமபடிசுகவாழ்வளித்துரக்ஷித்
துவராநின்ற மீனாக்ஷியம்மனை யிடபாகமவைத்தருளியசொக்கநாதரு
டையதிவ்யதிருவடிக்கிஅடியாள் அனேகவந்தனமவந்தனம,

பொதுவசனம.

இப்படியாக அல்லியரசிகொலுவிலிருக்க துரியோதனன்கலந்தா
ரிஎய அக்கினியிற்றள்ளப் போகுமசேதியை அல்லியரசிக்குத்தெரிவி
த்துதுர்யனை ஜெயித்துகலந்தாரியைரக்ஷிக்க அன்புகூர்ந்துமாயவரா
னகிருஷ்ணமூர்த்திபிராமணவடிவகொண்டு அல்லியரசிசபைக்குவரு
கிறவிதங்காண்க.

கிருஷ்ணமூர்த்திவருகிற-தரு.

வேதநாதன்சோதிபாதன    விண்ணவர்க்கமுர்தந்தந்த
மாதவன்மறையோனாகியே    மதுரைநாடி
மனையுகிக்ஷியாகவந்தாரே
பார்த்தவர்தோத்திரமசெய்ய    பாண்டவர்கள்சந்தோஷிக்க
சாஸ்த்திரமறையோனாகியே    மதுரைநாடி
சந்தோஷமாய்வந்து    மேவினார்
தெண்டுடன்கமண்டலமும்    சித்திரக்குடையிலக்க
குண்டலங்கள்தனைசயமேவ    ஆதிகிருஷ்ணதேவர்
குஞ்சிரிப்பாய்தானடந்தாரே
செஞ்சிலமபுதண்டைகொஞ்ச    தென்மதுரைஅல்லியாரை
வஞ்சியுமனங்களிக்கவே    அரிகிருஷ்ணதேவா
மாதரசிமுன்னேவந்தாரே

பொது-வசனம்.

இப்படிவந்த மறையவரைக்கண்டு அல்லிசொல்லுகிற விதங்கா
ண்க

அல்லிசொல்-வசனம்.

சகுணம்சகுணம்மறையவரேநீரெந்ததேசமஉமது நாமதேயமெ
ன்னநீரிமமிடத்துக்குவந்ததுயேதுகாரியம் அதைதெரிவிக்கும்படி யி
ந்தஆசனத்திலெழுந்தருளும அந்தணர்சிகாமணியே,

## கிருஷ்ணமூர்த்திசொல்-கவி.

எத்தியமாதேவாழி யென்பேரோவரதாச்சாரி
ஆகதிரையரிகளந்தேன் ஆரூடமகண்டாப்போல
சாஸ்த்திரமுரைக்கவல்லன் சதுர்மறையளிக்கவல்லன்
தோத்திரம்செய்வர்க்கெல்லாம சொற்பொருள்கொடுக்கவல்லன்

## வசனம்.

கேளும்மதுரைச்சரசியேயெனது தேசமோஉத்திரதேசம்யென்னாரோவடமதுரையாகும்யென்பேரோவரதாச்சாரிநானேயாத்திரையாகவந்தேன் யெனதுவல்லமையெப்படியென்றால் யாராவது ஆரூடங்கேட்டால் கண்டதுகண்டாப்போல் சொல்லவல்லவன்சதுர்வேதங்களுமதெளித்துபகாரவல்லவன்யென்னை தோத்திரம்செய்யப்பட்டவர்க்குபாக்கிமுதலானதர்க்கும் தடையில்லாமல் தந்துரக்ஷிக்கவல்லவன்தென்னாட்டரசியென்றும் உமதுநாமதேயபிரஸ்தாபங்களை கேழ்விப்பட்டு உன்னைபார்க்கும்படிவந்துகண்டுமனமகிழ்ந்தேனம்மாள்தாயே.

## அல்லிசொல்-கவி.

எந்தனைகாணவந்த யெழிலானமறைகுலேசா
வந்ததுபாக்யம்பெற்றேன் வஞ்சிநான்மகிழ்ந்தளித்தேன்
மைந்தனும்புலேந்திரனுகம் மருவியநாமய்நசி
அந்தஆரூடம்கண்டு அன்புடனுரைசெய்வீரே.

## வேதியர்சொல்-தரு.

மதுராபுரியாளும்அல்லி மாக்குயிலேபூங்கிளியே
சதுரான்மைந்தனுக்குஅம்மா தந்தையோ ஐவர்கடுபிரந்தோன்
தீரானதன்தாயாதி மித்திரனாலேநூறுபேராலே
சூதமாடிமுந்துஐவர் சேர்ந்துவனவாசம்சேர்ந்திருப்பார்
கொண்டாளுமகளையந்த கொத்தவர்காவல்வைத்திருப்பார்
கண்டேயவனுடனே கள்ளமாய்பிள்ளையையீயனுப்ப
அதனாலேகெர்ப்பமாகமாது அரிந்தம்மான்மாரும்யெசிலூட்டி
யிதுவேளைக்கொண்டுபோறார்கள்ள யிப்படிசாஸ்திரம்செப்புதம்மாள்

## கிருஷ்ணமூர்த்திசொல்-கவி.

எடுக்காதகாரியத்தை யென்னாளிசெய்தத்தினாலே
அடுக்காதகுலத்துக்கென்று அக்கினிதனிலேதள்ளி

மடிக்காது முன்னேசென்று மரிககாமல்நீயிருந்தால்
விடுக்காதுயுன்குலத்தை வேரரசெய்யுந்தானே.

வசனம்,

கேளும் அல்லிநாயகம் உலகத்துக்குயோர்க்காதகாரியத்தைநீசெய்ய அதனுலேஉன்மருமகள் ஐந்துமாதங்கெர்ப்பமாக அவளுடைய அம்மான்மாரிந்து நமதுகுலத்துக்குஆவாதென்று அக்கினிவளர்த்தி அதில்யின்றைபதினம்தள்ளப்போரார்கள் அதைநீதடுக்காவிட்டால் அந்தபாவம் உன்னைவிடாமல் உன்குலமநாஸ்த்தியாய்போகுமம்மான்நாயே,

அல்லிசொல கவி,

வண்டயமதன்னிலுள்ள மறையவரெவரென்றாலும்
கண்டுரைசெய்யப்போமோ கபடமாயிருக்குகம்மா
யின்றிக்தசேதிகண்டு யிவ்விடமநான்வாரமட்டும்
கொண்டிந்தமறையோன் தன்னை குரித்திடுமசிறைவைப்பீரே,

வசனம்.

கேளும்பவளசேனையே யிந்தஉலகத்திலுள்ள சோதிடமரிந்தவர் பெவாறலுமயிப்படி அரிந்துரைக்க வல்லவருண்டோ யிந்தசாஸ்திரம்சொனனைதப் பார்த்தால் யிதுவெகுகபடமாக தோணப்படுகிறது யிதைதமரிந்து தெளிந்துவாரபரிபந்தம் யிந்தபிராமணனைசிறையில்வைத்து காவல்படுத்திவாரும் மந்திரியாகியபவளசேனையே.

பொது வசனம்,

இப்படி அல்லியரசாணி கூரகிருஷ்ணமூர்த்தி சுயரூபம் கொண்டு வருகிறவிதங்காண்க,

பொது கவி,

இப்படி அல்லிகூர யிதுநல்லநீதியென்று
செப்பியரூபமாத்தி சிலேயுமசங்காழிதண்டம்
கைப்பிடிகெதையலங்க கதிர்மணியணிசொலிக்க
சொர்ப்பெருமகிருஷ்ணமூர்த்தி சுயரூபம்கொண்டிட்டாரே,

கிருஷ்ணமூர்த்தி-சொல்-தரு-சிந்து.

அரவக்கொடியோன்செய்த-அந்த- அன்னிதம செய்ததொரு விந்தையரிந்து-மறையவன்தனைப்பிடித்து-சிறைவைக்க-வல்லவளோ யிது நல்லநீதியோ யென்றுகெருவமபடைத்தாய் - நீயுமே-யீரேழுலகமுழுதாண்டபோதிலும் நானுன்னையரிந்திருப்பேன் -யிப்பொழுது-நாடியபஞ்சவர்க்கு வேணுமேயென்று - வந்தசேதியுரைக்க-நீயுமே-நல்ல

மைமிகுத்தவனோ-யெல்லையரிய-உனைமைந்தனமனைவிகளை-யிருக்கவும வைததகோர்துரியனை-யெத்திடுறமேவ - கையிலாகாமலடங்கி மகனு லேவாரிழைக்கலந்தாரியை-சேரம்புரிய - வையகமநகைத்திடவே-மீத டிக்கொண்டமாதர்பிபேசகஅவகேி-யேதுவைசெய்யும-தந்திரதனதுை



அல்லிசொல் கவி.

ஐயனே அபயமய்யா ஆதியே அபயமய்யா
வையகமளந்தமார்பா மாயவா அபயமய்யா
நையுதேயெந்தனெஞ்சம நெடியோனே அபயமையா
கொஞ்சும்மணவாளனே கோவிந்தா சருணமையா.

அல்லிசொல் தரு.

அடியாள்செய் தகுற்றமெல்லாம் அன்புவைத்துக்காருமையா
கெடிமிகுத்து அரசாண்டென்னை யிக்கெதிவருமென் றறிந்திடாமல
யெந்தனுலமுடியாதையா யெளியன்கோபமாக்துமையா
அந்தவிடம்போகயானும் அடியாளுக்கிடம்சொல்லுமையா

அல்லிசொல் கவி.

பஞ்சவர்தனை ரக்ஷிக்கும் பரந்தாமா அண்ணுபோற்றி
வஞ்சியுள மகிமைதன்னை மகிழ்ந்துமே அரிவத்தனைடோ
கொஞ்சமுமரியேன்செய்த குற்றமுமகற்றிவைத்து
ரஞ்சிதவதனயிப்போ கடைக்குமவாருனைசெய்வீரே,

வசனம.

சருணாகசருணாம் யென்னண்ணுமேவ தேவர்க ளறியப்படாத உம துமகிமையை பேதமையாளவளகண்டறியப்போமோ நான்செய்த பி

ழையைப்பொருத்து யினிகடந்துக கொள்ளும விபரம்யின்னதென்று கட்டளையிடுமண்ணாவே.

கிருஷ்ணமூர்த்திசொல் தரு.

| | |
|---|---|
| மதுரைநகர்கரசே | யென்னம்மாயினிசும்மா |
| மயங்கித் | தயங்காதே |
| பதரகலந்தாரியை | பாவிதுரியகவன் - தரு |
| பரிபரிவைத்துமே | யெரியதுமூட்டியே |
| துரியன்படை | மூரியககேடு (மது) |

அல்லிசொல்-தரு.

| | |
|---|---|
| பச்சைமுகில்வதனு | பாரந்தமாவெகுநேமா |
| படைகூட்டுவேன | னொடிக்குள் |
| அச்சமெனக்குண்டோ | அந்தகன்மைந்தனே-தரு |
| அடிபோடவே | மடியுமபடி |
| கொடிக்குள்ளவே | பொடியாக்குவேன (பச்) |

கிருஷ்ணமூர்த்திசொல் தரு,

| | |
|---|---|
| அலஸ்யப்செய்யாதே | யென்னம்மாயினிசும்மா |
| அரிவையை | இயிற்றள்ள |
| ஜாலமில்லையொரு | ஜாமமிருக்குது (தரு) |
| சலுதியாகவே | சமர்துடங்கிட |
| பவளசேனையும | நீயுமேகுவாய் (அல) |

அல்லிசொல் தரு.

| | |
|---|---|
| அட்டியென்னுயெனக்கு | பாரந்தாபாவெகுநேமா |
| அவனியெல்லாம | நடுங்க |
| வடிவில்லோதியே | மணமேவகமாய்சென்று-தரு |
| மனனனபடகளை | யினனினமக்குள்ளே |
| சிலனபின்னமாய் | செய்துவைகருரேன் (அ) |

கிருஷ்ணமூர்த்திசொல் வசனம.

அப்படியேபோய்வாரும யென்தங்கையே சண்டைமுடிவில்அவ் விடம்வருகுரேன சீகிரமாகடவுமயமான் தங்கையே.

அல்லிசொல் வசனம்.

அப்படியேபோய்வருகிறேன் அண்ணாவே ஆரடிதாதிகளா மிக்கு சுணம அஸ்த்தினபுரிபோகவேணும மாந்திரியாகியபவளசேனையை அழைத்துவாரும் பெண்களா அப்படியே அழைத்து வருகிரேனம்மா தாயே அந்தசமயத்தில் பவளசேனைவருகிர விதங்காண்க.

பவளசேனைசொல் கவி.

மணிமுடியரசிசொன்ன வாசகமதனைக்கண்டு
அணியணியாகச்சேனை அதிரவேமுரசுபேரி
துணிவுடன்சிலைவாள்தண்டம் தோமரம்பாலாதாங்கி
பணியொளிபவளசேனை பாவையுபவருகின்றளே.

பவளசேனைவருகிற தரு,

மதுரைக்கரசிஅல்லி மந்திரிபவளசேனை
யெதிரில்லாதஅரசி யிணைபமனதரிய (சுரு)
யிரவியுமதியொளி பரவியதிருமுகம
அரிவயரிருபுரம கிரையவேவீசி (மது)
வதனசுட்டிகளாட வஞ்சியர்கவரிபோட
அன்னகந்திரூபி அழகாய்நடைநடந்து (சுரு)
அங்கமிலகிய குங்குமரூபி
செங்கையிலவங்கியும் சுங்குமிலங்கிட (வத)
பசசைதுராவுபக்ச்சு உச்சிதகுப்பிகளாட
பதக்கம்பளபளென்னவே வச்சிரகொந்தள
ஓலைவளையல் கலகலென்னவே
கசசணிகொங்கைள்விம்ம கதம்பப்பரிமளிக்க-(சுரு)
கண்டவரஞ்சவே தெண்டமுமதனுவுகள்
பிண்டியிலாமழு கொண்டுமேமகையில்(மது)
சல்லரிதம்பட்டம்பேரி தாளம்துத்தாரிபூரி
தவண்டைமல்லாரிவீரவே வெகுவேடிக்கையாகவே
தவண்டைமல்லாரி வீரவே
மல்லரிடமகரமகுப்பி வரிசையெக்காளசின்னம்
சொல்லரியவாத்தியங்கள் யெல்லையெங்கும்தானதிர (சுரு)
துடியிடைசேலையும வடிவுதிரைக்கிட
செடிமுடிஅல்லியை கடிகியேகாண (மது)

பவளசேனை அல்லியைகாணும்-தரு.

மதுரைநாயகி மணிமகுடசேகரி
அதிரக்காசியேயம்மா அடியாளவந்தனம்

அல்லிசொல் தரு.

பாசமாகியமந்திரி — பவளசேனையே
யிசனருளாலே யென்றும்வாழ்குவாய்

பவளசேனைசொல் தரு,

பருவமிஞ்சிய பாண்டியன்மகளே
வலிவில்லேந்தியே மகராஜியேவந்தனம

அல்லிசொல் தரு.

அரிசிலிருந்துமேயெந்தன் அரசுஞங்கவேவருக
தரிவிக்குமல்ல மாதேவியரி

பவளசேனைசொல் வசனம்.

சருணம்சருணம் பாண்டியவள நாட்டுகுரிய மாதாசியேஅடியாளை அழைப்பித்தவிபரம யின்னதென்று தெரியச்சொல்லுபதாயே.

அல்லிசொல் வசனம்.

கேளும்பவளசேனையே யெனதுமருமகன் புலந்திரனுக்கு கெர்ப்பிமாகினுளாம அதுருத்தமாய் துரியோதனன் கலந்தாரியைதியிற்றள்ளப்போறதாய் மாயவன்தெரிவித்துப்போனாரல்லவா அதுகாரியமாய் சண்டைக்குப்போகலாம வாருமமந்திரியாகிய பவளசேனையே,

பவளசேனைசொல் தரு.

துரிபணிப்படிசெய்யத்திரமோ அவனை
திண்டிக்கநமக்கென்ன பாரமோ
கரிபரிசேனைசூழ கடுகிரதமூடிக்கி-சரு
 கந்துபாய்ந்துமே சிந்துசிந்தாக
 தந்திடும்விடை றைந்திடசெய்வேன (து)

அல்லிசொல் தரு,

மந்திரிபவளசேனியே நீயும்
மகிழ்ந்துபேசுராயின்னம் சொல்லிமே ய
அந்தசஅமரர் அஞ்சும அரவக்கொடி துரியன்-சரு
 ஆகுமோயுந்தனுல் சேவகம்செலுத்தவே
 வேகமாய்காமுமே போகலாமவாரும் (மங்)

பவளசேனைசொல் தரு.

அப்படிப்பட்டவன் தன்னைகொல்லுவேன் யென்னை
யார்வந்துயெதிர்த்தாலும வெல்லுவேன்
யிப்படிப்பட்டவர்களை யெனக்குவிடையளித்தால்-சரு
 யெட்டிவேகவர்களை கொட்டியேபடைகளை
 கட்டியேதுண்டமாய் வெட்டியேவருவேன் (அப்)

அல்லிசொல் தரு.

படைபிரமரியாமல்பேசுராய் நீயும்
பதரிமனதுநொந்து கூசுராய்
கடையில்லாமலேயிகி தையல்தனை தடுத்து (சரு)
 தாக்கியவர்களை பாக்கியில்லாமலே
 மாய்க்கவேகணடியும் தேககவேவாரும் (ப)

பவளசேனைசொல்-கவி.

சந்திரகுலத்துவேந்தன் தையலேமடிகத்துமுன்னே
அந்தமாககரம்போக அணிபடைதலைவர்சூழ

விந்தையாய்ரதத்திலேரி விருதுகள்பலவுந்தாங்கி
சுந்திரவதியேநாமும சுருக்குடனேகுவோமே.

வசனம்.

கேளுமம்மா அல்லியேதுரியராஜன் கலந்தாரியைமடிபசசெய்யுமுன்னமே அவ்விடமசென்று தடுக்குமபடிரதமேரிவிருதணிந்து அணிவரிசைபடையுடனே சலுதியில்போவோமவாருமம்மாதசமே.

அல்லிசொல்-தரு

சண்டைக்குநடப்போமவாருங்கள் ரதகஜதுரகபத்திகளுடனே
சண்டைக்குநடப்போம வாருங்கள்
கண்டவர்மனமதிக்க யெண்டிசைப்புகழ்படைத்த
துண்டகண்தனேமடிக்க கண்டவராதிசயிக்க (தரு)
பெரியரதமதில் மாரியமணிமுடி
சூரியனென்னவே வீரியங்கொண்டு (சண்டை)
பேரிகைமுரசுடக்கா பேசிய துத்தாரிசின்னம்
விரிடும்பூரிகைபேரி விண்டலமதிடுகிடென்ன (தரு)
வெத்திமிகுத்திடும் பத்தியதாக
மைக்குழலபார்வதி சொக்கரைநமபி (பேரிகை)
பாரவனமகாட்டைவிட்டு பாவயராண்டிடும்பூமி (தரு)
தையலேநாமும தீயில்வீழாமலே
உய்யவேவாடும் வையகம்பானை (சண்டை)
கவரிகுடைகவிய கதிரொளிகொடிபாக்க
கெவுரிபாகனேயென்று கெதையுபசிலைவாளேந்தி (தரு)
செஞ்சியமன்னர்கள் அஞ்சியேயோட
மிஞ்சியேவாடவும சொஞ்சமுமகிழ்ந்து (சண்டை)

பொதுவசனம்.

இப்படியாகஅல்லியரசிபடைகூட்டிவருமபோ துதுரியோதனன் கலந்தாரியைதியிற்றள்ளுநிரவிதமகாணக

துரியோதனன்சொல் தரு

சகுனிமாமாதம்பிமார்களே பிலனே
தடையில்லாமல தன்னுவீர்களே
ஆகமேவாடியே ஆலிசயசெய்யாமல்
அட்டிதிட்டிகோலம் சாட்டாமக யெவ்வின்னே
நடந்துவாடி வாடிவைகைசோ நடந்துவா





கலந்தாரிசொல் தரு.

அய்யோகாவென்னசெய்வேன் அவனியில்பெண்பிறந்து
அவதிபடவிட்டாயோ தெய்வமே
செய்யாதகாரியத்தை செய்தேனோயான்பாவி
இககில்லாபாவியானேன் தெய்வமே

தர்ச்சாதனன்சொல்-தரு.

கோதையேநீபடிநீலி யெங்கள்
குலத்துக்கினம்வைத்தருவி
பாதகிநீமெத்த பாசாங்குகாட்டுராய்
யதைக்கக்கொதிக்கத்தீயில் வதைக்காமலவிடுவனோ
நடந்துவாடிவைகைக்கு நடந்துவாடி

சலந்தாரிசொல தரு,

காசினிமாதரைப்போல கணவனுடனேகூடி
களிப்புகவொண்டிருந்தேனே தெய்வமே
ஆசைநாயகனை நீவ் அவ விலெலந்தனே தளா
அயன்விதித்தவிதியோ தெய்வமே

தர்சசாதனன்சொல் தரு.

தெரியுமக்கினிதன்னைப்பாரடி உந்தன்
மிஞ்டமயெல்லாமவிட்டு சோடி

அடக்கியொடுக்கியுன்னை மடக்காமல்விடுவேனோ
அயன்வந்து தடுத்தாலும் உன்னைவிட்டுபிரிவேனோ
நடந்துவாடி வாடிவை கைசேர நடந்துவாடி.

கலந்தாரிசொல் தரு.

அரனேபரனேயிந்த ...... அன்னிதம்உலகுக்கு
அடுக்குமோயென்னசெய்வேன் தெய்வமே
வரமதந்தருளுமீசா மங்கைதீயிலழுந்தாமல்
வாடிபதராலாச்சே தெய்வமே

துரியோதனன்சொல் தரு.

தம்பியிவளைத்தீயில்தள்ளடா யென்சொல்
தடுக்காமலேயின்பம கொள்ளடா
வெம்பியழுதுவாடி மெய்ப்படுமிவளைய
வெட்டிகட்டிதீயில இட்டெனபோடுங்கள்
நடந்துவாடிவாடிவைகைச்சேர நடந்துவாடி

கலந்தாரிசொல் தரு,

மணவாளன் துணையில்லை மாமிகெதியுமில்லை
மாமன்பந்துக்களில்லை தெய்வமே
அணியுந்திப்பிரகாசா அரனேயுன்னைநம்பினேன்
அழுந்தாமல் துயர்காரும் தெய்வமே

துரியோதிரன்சொல்தரு.

துண்டகாகயென்பின்வந்து துர்ச்சாதனனேகேளடா
கண்டோமிந்ததிக்குழியை காட்டிவலமாய்கன்னியை
பண்டிதீயில்விழுந்திடாமல மாதுயிருப்பதேதடா
சண்டனைப்போலிவளை யிருகைகொண்டுதூக்கிதள்ளடா

பவளசேனைசொல்வசனம்.

இப்படிநடப்பதைகயரிந்து அல்லியரசியுடனேவந்தமந்திரிமாதுப டையுடனேவந்துவிழுந்து தடுக்கிரவிதங்காண்க.

பவளசேனைசொல்-தரு.

அருவையைத்தள்ளாதேகில்லடா யிதோ
அல்லிவாராள்பதில்சொல்லடா (அருவை)

துச்சாதனன்சொல் தரு.

நடுக்கவந்தவளெந்தவூரடி உன்னை
தண்டிப்பேன் நீபதிசோடி
மூடுக்குமலுடுக்குமெத்தன் மூன்னிர்ப்பதேதடி
மூடியாதுயிதைவந்து தடைசெய்யுமெவராலும் (நடுக்)

பவளசேனைசொல்-தரு.

பிரட்டிநாலுமொன்று          முடியாதே
யெரிவிளக்குபூச்சுபோலே          மடியாதே
பிரட்டிப்பேசாமலே          பெண்செய்ததுத்தத்தை
பிரியச்சொல்லிபின்பு          யெரியிற்றள்ளலாம்தெப்பு (பிர)

துர்ச்சாதனன்சொல் தரு.

கேழ்க்கஉனக்குசொந்தமேதடி          வந்த
கெபபிரம்கிலேக்காது          பாரடி.
வாழ்க்கைக்கிடர்செய்யும்          மாதரைபிடிக்காமல
வைத்திடும்குலமெல்லாம்          சுத்திபினத்தாதே (கே)

பவளசேனைசொல் கவி.

சூரியவன் தம்பியான துண்டனேயென்னநீதி
அருணையைகணவன்சேர்ந்தால் அதுகுத்தமாகயெண்ணி
யெரியினிலிடவுமக்கு யென்னதான்சொந்தமுண்டு
நெரியில்லாதவனேயிப்போ நிமிஷத்திலதைச்செய்வோமே.

வசனம்.

கேளுந்துர்ச்சாதனா யிதுவென்னநீதி கலந்தாரியை கணவன்சே ந்துகெர்ப்பமானால அதுகுத்தமாகயெண்ணி அக்கினியிற்றள்ளும்படி உங்களுக்குயென்ன சொந்தமிருக்குது நீதிநெரியிலல தமன்னர்களே யெங்களபெண்ணைவிட்டாலாச்சுது யில்லாவிட்டால் ஒருநிமிஷத்தில அதைச்செய்வோம்ராஜனே.

துர்ச்சாதனன்சொல தரு.

வீரமபேசவந்ததேதடி          வில்லே
வளைத்துவிடுத்துசரத்தால்படிப்பேன்          பாரடி.

பவளசேனைசொல் தரு.

பாரும்கொடிக்குள்ளேபாணமுமீட்டியே          அடா துர்ச்சாதனா
பதைக்கஉங்களையிப்போ          வதைப்பேண்டா

துர்சசாதனன்சொலதரு.

வதைப்பனென்றுமே          வலுமைபேசுறாய்
அடிபவள          சேனையே
அடிப்பேனுங்களை          கொடிக்குள்ளாகவே
பிடிக்குரேணபார்          துடிக்கபுகைளே (வ)

பவளசேனைசொல் தரு.

ஆகாதெங்களை          வெத்திபெத்திட
அடா துர்ச்சாதனா

அருமசரங்களை பெருகவிடுத்தேனை
வருமசரங்களை தறித்துமேவிட்டேன் (அ)

துர்ச்சாதனன்சொல் தரு.

விடுத்தசாரத்தை தடுத்துமீறியே
அடிபவள சேனையே
வேண்டியசரங்களை நான்பீட்டினேன்
தாண்டியோரத்தத்தை யோட்டினேன் (விடு)

பவளசேனைசொல் தரு.

காணயெவரும் நடுங்கியோடவே
அடாதுர்ச்சாதனா
கடிகிபடையை மடியத்தாக்கினேன்
கொடியிலுன்னை பொடியாய்செய்வேன் (கா)

துர்ச்சாதனன்சொல் கந்தார்த்தம்.

பின்னரிவாணமாதே பெணடுகளெல்லாங்கூடி
மன்னரையடித்திடாமல் மரிதது மேசண்டைசெய்ய
சென்னகர்க்குரிதியோட இங்கேட்டிபதரிவாட
பொனகர்தேவர்மெச்ச,

துர்ச்சாதனன்சொல் தரு.

பூட்டினேனே அமோகபாணம் நானுங்களை வதைசெய்ய
பூட்டினேனே
பூட்டியசரங்களை மீட்டினேனொடிக்குள்ளே
காட்டியவிரியம வாட்டுதுயாரும் (பூட்)

பவளசேனைசொல் கந்தார்த்தம்.

சங்கோபசங்கமாக சரங்களை விடுத்தபோது
வெங்கோபமிகவேமீறி வில்வாங்கிசரங்கள்பூட்டி
மங்காமல்அதைகண்டித்து மருகனையுடனேயேவி
தங்காமல்வீயுமோட

பவளசேனைசொல் தரு.

தாக்கினேனுக்தனைபாரடா யென்வீரமோங்கிட
பாரடா
தாக்கினேனுன்னை
தாக்கினேனபாணமும நோக்கமில்லாமலே
மாய்க்கவேபடைகளை சாய்ப்பதேயுரிதி

அல்லிசொல் வசனம்,

இப்படிசரம்பெய்யும்போது அல்லியரசி துரியோதனனைப்பார்த்துசொல்லுகிறவிதங்காணக,

அல்லிசொல் கவி,

வடிவினில்மிகுத்ததிரா மருமக்காள்தன்னைதெண்டிக்க
கெடிமுடிமனாருநீயோ நிகரிலாவீரன்தானோ
அடியோடேமடிக்கவேண்டி அல்லியாள்கோபமீரி
கொடியகூத்தவனைப்போலே நீரிங்குவந்தெதிர்த்திட்டேனே,

வசனம்.

கேளும்துரியபூபனே! யென்மருமகளை தெண்டிக்க நீயோகெடி முடிக ளுகாத்தனோ யிந்தவுலகத்துக்கு மிகுசியதீரனோ உங்களையெல்லாம் அடியோடே மடிக்கும்படி யெமனைப்போல்வந்துயெதிர்த்தேனெ யென்பேரா மதுரைநாயகி அல்லியாசியென்றும அரியடாசராஜனே,



அரியன்சொல் தரு

யேதம அல்லியேயிப்படிவந்தது    ஞாயோயெணணமத்து
செல்லவுமோன    தீரமோ
மாதரைக்கூட்டியே    வந்ததுஉன்னிட தீரமோ
வாட்டியேயுங்களைமடிக்க    யெனக்கென்னபாரமோ
வந்தாயென்னையெதிர்க்க    னெக்கேதபதரிடவும
சிந்துசிந்தாகவே    அந்தகன்பதியனுப்ப
தீரமுண்டுவெகுவீரமுண்டு    கனஞாமுண்டு
வெத்தி    பேருமுண்டு

துண்டம்துண்டமாயுங்களை வாட்டுவேன்
கண்டிக்கவெகுசரங்களை மீட்டுவேன் (யே)

அல்லிசொல்-தரு.

இந்தசவுரியமபேசவே கோபங்கொண்டனோ
யெதிர்த்துவந்திடதிரமு முண்டோதுண்டனே
சிந்தைநொந்திடவாட்டுவேன் பாரமிண்டனே
செங்கையிலாயுதம் யேந்தியஉள்வலுகண்டனே
திங்கள்குலவீரியனே யெவருமபடையுடனே
தங்காமலேகொடிக்குள் பங்கப்படவடிப்பேன்
தேங்கிடவேகெடு தாங்கிடவேசரம்
மோங்கிடவேபின் வாங்கிடவேநீ
சேவரஞ்சவே பாணமெடுப்பேன்
பாவியுங்களை பாளமடிப்பேன் (யிந்த)

சூரியன்சொல்தரு.

அல்லியேயிப்படிவந்தது யிதுவெதுகோடி
அச்சமில்லாமலே வீரமடக்குவேன்பாரடி
நல்லதுஉன்னுயிர்தப்பியே உன்பதிசேரடி
நாட்டினிலெந்தனை வெல்லுவாருண்டோகூறடி
நாகக்கொடிபடைத்த யோகசாலியென்றெண்ணமல்
தோகைக்காகவந்த சேஷகமரிவேண்டி
சூரமுண்டோவெல்ல தீரமுண்டோவெகு
நேரமுண்டோஜெய பேருமுண்டோதண்டிக்க
வெகுசரங்கள்மீட்டினேன் கண்டிக்குப்படி
திரங்கள்காட்டினேன் (அல்லி)

அல்லிசொல்-தரு.

அண்டரெண்டரும் நெஞ்சகவீரியம்காட்டுவேன்
அமோகமாகஅருசரங்களை மீட்டுவேன்
கண்டவிடமெல்லாம்பிணங்களாகவே கூட்டுவேன்
கடியுந்தனையிப்பவே கான்பதியோட்டுவேன்
கத்தவித்தைகளெல்லாம் மெத்தமெத்தவேபேசி
குத்துபதியில்லாமல் தத்திகுதிப்பதென்று
சாடிடவேபடை நாடிடவே
அஞ்சிஓடிடவேமனம் வாடிடவே
தரணிமன்னர்கள மயங்கிவாடவும
சிரிபரியானைகள் கலங்கியோடவும் (அண்ட)

துரியோதனன்சொல்-கலி.

கடல்சூழ்ந்தஉலகுக்கெல்லாம் கதிர்முடிவேந்தனென்றும்
அடல்மிகுவேந்தரெல்லாம அடிபணிந்திருக்கவென்னை
மடமாதுநீயோயென்முன் வல்லமைசெலுத்தவந்தாய்
உடல்வேறுதலைவேராக உன்றனை கண்டிப்பேனே.

வசனம்.

கேளாயல்லியரசியேகடல்சூழ்ந்த உலகுக்கெல்லாம்நானே தலைவனென்னும்மணிதாங்கிய மன்னரெல்லாம்யென்னடிபணிந்திருக்க நீயோ பெண்ணாய்பிரந்தவள் யென்னைமதித்திடாமல் யெதிர்த்துப்போராடவந்தாயல்லவா நல்லதுஉன்னை உடல்வேறு தலைவேறு கைவேறு கால்வேராக கண்டிக்க பாணமெடுத்தேன் பாரும அல்லியரசியே.

அல்லிசொல் தரு.

மணிமுடிதரித்தராஜனே உந்தனையிப்போ
மடிக்கபாணங்கள் யீட்டிவேன் (சுரு)
மண்டலந்தன்னிலே கண்டவாஞ்சியே
துண்டகியென்றுமே மண்டலமஞ்சுமே (ம)

தரியன்சொல் தரு.

மருமகன்தன்னைவேண்டியே யிதுவரைக்கும
வாராதிருந்த தென்னடி (சுரு)
மடிக்கவேவந்தனே முடிக்கியேவந்தனே
துடிக்குராயென்னடி அடிக்கடிபேசியே(மரு)

அல்லிசொல் தரு.

வஞ்சகதுரியனென்றுமே உந்தனைகிட்டி
வாராதிருந்தா லாகுமோ
வல்லமைபேசுராய் செல்லுமோவீரியம
நல்லதுஉந்தனை கொல்லவேவந்தேன்(வஞ்)

தரியன்சொல் தரு.

சகுனிசல்லியருடனே தம்பிமார்களும
தளம்வெகுவாக யிருக்க
சத்துருமெண்ணுமலே வெத்திபொருந்திட
பத்திபாய்வந்திட குத்தமேசேரும(சகு)

அல்லிசொல் கந்தார்த்தம.

கிரீடமுரசுபேரி வெகுண்டுகெர்ச்சிக்கவேகொண்டு
தேரிடமதுரைசொக்கர் திருவடிதன்னை துதித்து

பேரிடிமுழக்கமுள்ள பிரசண்டசேனையைநீட்டி
நேரிடும்படையைவாட்டி.

அல்லிசொல் தரு.

நீருநீராகவடித்தேன் படைகளெல்லாம்
தாறுமாறாக விடுத்தேன்
சாரும்படையுடனே தம்பிதுரியவர்கள்
சேரும்பிடமரிந்து சின்னாபின்னமாகிப்போக (நீரு)

அல்லிசொல்வசனம்.

இப்படி அல்லி அரசிவிட்ட அஸ்திரத்துக்கு முன்னிற்கமாட்டாமல் துரியோதனன் முதலானவரும் படையுடனேமுரிந்த கலந்தாரியை விட்டுவிட்டு முதுகிட்டோடி அஸ்த்தினாபுரியை அடைந்திருக்க யிவ்வி நடக்கும்விபர முரைக்கும்படி கிருஷ்ணமூர்த்தி அல்லியாரிக்குக்காக கதிதாவருகிற விதக்காண்க.

கிருஷ்ணமூர்த்திவருகிற கவி.

அந்திரதேவர்வாழ்த்த அருந்தபமுனிவர்போற்ற
கந்தமும்பரிமளிக்க கவுஸ்துவாபரணமினைன
சந்திரபஞ்சவாளி துலங்கிட அல்லிமுன்னே
சிந்தையுமகளித்துகிருஷ்ண தேவரும்வருகின்றாரே.



கிருஷ்ணமூர்த்திவருகிற தரு

ஹரிகிஷ்ண

தேவர்வந்தார்
தேவர்வந்தார்
தேவர்வந்தாரிந்த ஜெகமெச்சுக்குதிசெய்ய
ஆவலாகருந்த அந்தணர்மறைபாட (தே)
தேவரம்பைகீதம்பாட கவினையார்களாட
சோதிகவசணிகள துலங்கப் ணிரஜிலங்க(தே)

ஆதிமூலதாரன் அன்பாய்கொருடநேரி
சேடிவடிவமின்ன சுந்தரி,அல்லி மூன்னே(தேவ)
டக்ரவாளோக்கில்ல சங்குசக்ரம்தாங்கி
திக்கதண்டமிலங்க விண்ணவர்துதிசெய்ய (தே)
மைக்குழல்கலந்தாரி மாதுமனக்களித்து
புஷ்ப்பமலர்கள்தூவ புண்ணியன்கண்ணன்வந்தார்(தே)
ஆயர்கள்தேட அந்தரந்தன்னில்
லீலைவிசையாட சாயல்நடைநடந்து (தே)
கண்டைகொலுசுகொஞ்ச தாழ்வடமார்பிலாட
மாயனுணகிருஷ்ணர் மனதுகளித்துவந்தார் (தேவர்)

கலந்தாரிசொல்-கவி.

சங்குசக்கரம்வாள்தெண்டம் தனுவேந்துங்கரனேபோற்றி
மங்கைலக்ஷிமியைமார்பில் வைத்திடும்பரனேபோற்றி
கங்கைசேர்பாதாபோற்றி கவுஸ்த்துவாபரனேபோற்றி
யெங்களையாதரிக்கும் யெம்பெருமானேபோற்றி.

வசனம்.

அகிலாண்டகோடிபிர்மாண்டநாயகா பெருப்புகடையெண்பத்தி நான்குநூராயிரம ஜீவராசிகளெல்லாம் உமதுகுஷ்ட்டிக்குள்வைத்து ரக்ஷிகதுவாநின்ற ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே உமதுதிவ்ய திருவடிகளுக்கு அனேகவந்தனம் வந்தனம்கர்த்தனே.

கிருஷ்ணமூர்த்திசொல் கவி,

தென்னாட்டுக்குரியஅலலி மாதேவாழி
தேவர்முதல்புகழ்ந்தோங்கும் கோதேவாழி
பின்னாட்டைவிட்டுநீயுமெபென்னுடனேநீங்கள்
யேகியேயுங்களுடநாடுசேரும்
பின்னுமேலகீர்த்திபெற்று யோங்கிவாழ்ந்து
[illegible]ப்பெற்றுமே கீர்த்தியோங்கி
கண்ணனையீசனிட பாதந்தன்னில்
காக்ஷிபைபூணும்படி போற்றினேனே,

வசனம்.

தென்னாட்டரசியான அல்லியரசியே அம்மா கலந்தாரியேநீங்கள் சமாதவாழுக்கடவது நீங்கள்யென்னுடனே யிவ்விடம்விட்டு மதுராபுரிசேர்ந்து கீர்த்தியோடு வாழ்கும்படி போய்வாருங்கள் நான்திருப்பியேபோய்வருகிறேன் தங்கையே,

அல்லிசொல் வசனம்.

அப்படியேமகாபாக்கியம் போய்வாரும் மென்னண்ணாவே யிப்படிவரமளித்து பகவான்யிருப்பிடம் சேர்ந்திருக்க அல்லியரசிதனது படையுடனே மருமகனை பல்லக்கிலேத்தி பயணமாகி மதுராபுரிசேர்ந்து வந்தார்கள.

மங்களத்தரு

| | | |
|---|---|---|
| மங்களம்ஜெய | மங்களம் | மங்களம் |
| மதுராபுரியாளும் | அல்லியரசிக்கும் | மங்களம |
| மங்களமாயனுக்கும் | மாதுகலந்தாரிக்கும் | மங்களம |

வாழி கவி.

இப்பெருமசரிதைவாழி யிக்கதைபயின்றோர்வாழி
தப்பிதபொருத்தாள்கின்ற தயாபரநாதன்வாழி
ஒப்பியேமறையோர்வாழி உலகெலாமசெழித்துவாழி
செப்பினோர்கேட்டபேரும செழித்துமேவாழிவாழி.

புலந்திரன் களவு நாடகம

முற்றிற்று.